பொதுசன நூலகம்

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்
SPICE TRAVELS & TOURS (PVT) LTD®
IATA

(C/638)
412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)
Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 19 சனிக்கிழமை (02.04.2011) பக்கங்கள் 12 ஓசை – 185

## வடக்கில் வர்த்தக முதலீடு; பல்தேசியக் கம்பனிகள் ஆர்வம்

(கொழும்பு)

வடபகுதியில் பாரிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு உலகின் முன்னணி முதலீட்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள அமெரிக்காவின் முன்னணி முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த முதலீட்டாளர்கள் நாட்டில் முதலீட்டு வாய்ப்புக்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் நிலவும் சமாதானம், அரசியல் ஸ்திரத்தன்மை ஆகியன எதிர்கால முதலீட்டு வாய்ப்புக்களுக்கு வழி வகுக்குமென முதலீட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கொக்கோகோலா, ஜோன்டீரா, ஈக்வன் போன்ற முன்னணி நிறுவனங்களின் தலைவர்கள் இவ்விஜயத்தில் கலந்து கொண்டனர்.

வடக்கு- கிழக்கு மாகாணங்களில்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதப் புதையல்கள் முல்லையில் மீட்பு

(முல்லைத்தீவு)

புலிகள் அமைப்பின் ஆயுதங்கள் தொடர்ச்சியாக முல்லைத்தீவுப் பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டுக் கொண்டிருப்பதாக விசேட அதிரடிப்படையினர் அறிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு பிரதேசத்தின் கட்டளை மற்றும் பாதுகாப்புப் பொறுப்பை விசேட அதிரடிப்படையினர் ஏற்றது தொடக்கம் அப்பகுதியில் நாளாந்தம் மேற்கொள்ளப்பட்டு வரும் சோதனைகளின் போது பெருந்தொகையான ஆயுதங்கள் நாளுக்கு நாள் கண்டுபிடிக்கப்பட்டுவருவதாக அதிரடிப்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன் ஒரு கட்டமாக முல்லைத்தீவின் அடம்பன் பிரதேசத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின

(11 ஆம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்தியும், அதிகாரப்பகிர்வும் எமது மக்களின் அரசியல் இலக்குகள்

## புலம் பெயர் தமிழர்களின் ஆதரவைக் கோருகிறார் அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

எமது மக்கள் வழங்கும்ஆதரவும் அரசியல் பலமும் ஒன்றிணைந்து, அபிவிருத்தியும் அதிகாரப்பகிர்வும் கலந்த எமது அரசியல் இலக்கை நோக்கிய பயணத்துக்கு வலுச் சேர்ப்பதாக உள்ளது என்று நாம் நம்புகிறோம். இவ்வாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் லண்டன் கிளையின் அங்கத்தவர்களுடன் இடம்பெற்ற 'ஸ்கைப்'இணையத்தின் மூலமான கலந்துரையாடலின் போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## ஏறாவூரில் ஆர்ப்பாட்டம்; அமெரிக்காவுக்கு கண்டனம்

(மட்டக்களப்பு)

லிபியா மீது அமெரிக்க கூட்டுப் படைகள் மேற் கொண்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து இலங்கையில் கிழக்கு முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு - ஏறாவூரில் நேற்று வெள்ளிக்கிழமை

(11 ஆம் பக்கம் பார்க்க)



## உலகக்கிண்ணத்தை இலங்கை வசமாக்க திருப்பதியில் ஜனாதிபதி விசேட வழிபாடு



(கொழும்பு)

மும்பையில் நடக்கும் உலகக் கோப்பை இறுதிப் போட்டியை காணச்செல்லும் ஜனாதிபதி ராஜபக்ஷ நேற்று திருப்பதி ஏழுமலையான் கோவிலில் தமது நாட்டு அணியின் வெற்றிக்கு வழிபாடு செய்வதற்காக சென்னை சென்று அங்கிருந்து கார் மூலம் அவர் திருப்பதி சென்றார்.

யுத்தத்திற்குப்பின்னர் இந்தியாவுக்கு பலமுறை சென்றுள்ள ஜனாதிபதி ராஜபக்ஷ இதுவரை சென்னைக்குப் போனதில்லை. இப்போதுதான் முதல் முறையாக தமிழக மண்ணில் அவர் காலடி எடுத்து வைக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய, இலங்கை அணிகள் மோதும் கிரிக்கெட் உலகக் கோப்பை இறுதிப்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகரிக்கிறது கடன் அட்டை மோசடி; தடுத்து நிறுத்த அரசு புதிய உபாயம்

(கொழும்பு)

நாட்டில் கடனட்டை மோசடிகள் நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்படுகிறது. இதனைத்தடுத்து நிறுத்துவதற்கு அரசு புதிய உபாயங்களைப் பின்பற்றவிருக்கிறது. முதற்கட்டமாக இந்த மோசடியை தடுப்பதற்காக நிபுணர்கள் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. கொடுப்பனவு முறை மோசடி தொடர்பான சட்டத்தின் பிரகாரம் கடன் அட்டை மோசடி குறித்து விசாரணை நடத்தும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, பொலிஸாருக்கு உதவுவதற்காக, இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார். அமைச்சரவை முடிவுகளை

(11 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுக்கு ஆயுதங்கள் கிடைப்பது தடுத்து நிறுத்தப்பட்டது எப்படி?


### இது ஒரு உலகளாவிய முயற்சி

புலிகளின் நிதி சேகரிப்பு மற்றும் ஆயுதக் கொள்வனவு என்பனவற்றை முறியடிப்பதற்கான ஒருங்கிணைக்கப்பட்ட சர்வதேசச் செயற்பாடுகள் 2006ஆம் ஆண்டின் ஆரம்பத்திலேயே தொடங்கப்பட்டதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை முடிவுக்குவந்து யுத்தம் தொடங்கப்பட்ட காலப் பகுதியிலேயே அமெரிக்கா இத்திட்டத்தை முன்னின்று தொடங்கியுள்ளது. புலிகள் சட்டவிரோத நிதி சேகரிப்பு மற்றும் சட்டவிரோத ஆயுதக் கொள்வனவு ஆகியவற்றை தடுக்கும்முகமாக இரண்டு சர்வதேச தொடர்பாடல் குழுக்கள் அமைகக்கப்பட்டன.

இந்தத் திட்டத்திற்கு இலங்கை விருப்பம் தெரிவித்துள்ளதுடன், இந்தத் தொடர்பாடல் குழுக்களின் செயற்பாடுகளுக்கு இந்தியாவையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என இலங்கை அமெரிக்காவிற்கு விருப்பம் தெரிவித்துள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



# 49 சி.சி.ரக மோட்டார் சைக்கிள்களின் பதிவுப் புத்தகம் கிடைப்பதில் தாமதம்

## பாவனையாளர்கள் விசனம்

(தொல்புரம்)

யாழ். மாவட்டத்தில் 49 சி.சி. ரக மோட்டார் சைக்கிள்களின் பதிவுகளுக்காக யாழ். செயலகத்தில் விண்ணப்பித்தவர்களுக்கான பதிவுப் புத்தகம் இதுவரை பலருக்குக் கிடைக்கவில்லையென மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மேற்படி மோட்டார் சைக்கிள்களின் பதிவுகள் யாவும் கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யப்படவேண்டுமென அரசாங்க அதிபரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து பெருமளவிலான மோட்டார் சைக்கிள் பாவனையாளர்கள் முண்டியடித்துக் கொண்டு யாழ். செயலகத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டனர்.

எனினும் மூன்று மாதங்கள் கடந்துவிட்டபோதிலும் பலருக்கு இலக்கத் தகடுகளோ பதிவுப் புத்தகங்களோ இதுவரை வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக மாவட்ட செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவு அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டுகேட்டபோது, தமக்கு இலக்கத் தகடுகள் கொழும்பில் இருந்து இதுவரை அனுப்பிவைக்கப்படவில்லை எனவும், விண்ணப்பப் படிவங்கள் ஒழுங்கமைக்கும் பணிகள் நடைபெறுவதாலும் சிறிது கால தாமதம் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக தாம் ஏற்கனவே பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாகவும், எனவே, சில மாதங்கள் ஆவணங்கள் பரிசோதிப்பதற்கான கால எல்லை நீடிக்கப்படுமெனவும் அவ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (26)



யாழ். மாநகரசபையினால் மத்தியூஸ் வீதி, இரண்டாம் ஒழுங்கை தார் வீதியாக மாற்றப்படுவதை யாழ். மாநகரசபை பிரதி மேயர் துரைராசா இளங்கோ (றீகன்) பார்வையிடுவதைக் காணலாம். (படங்கள்: மிதிலன், கஜன்)

# சட்டவிரோத செயலுக்கு அபராதம் விதித்தது நீதிமன்று

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரமின்றி மூங்கில் தடிகளை வாகனத்தில் கொண்டு சென்ற நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தினால் 1500 ரூபா அபாராதம் விதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இவ்வாறு மூங்கில் தடிகளைக் கொண்டு சென்ற நபரை சாவகச்சேரி பொலிஸார் கைது செய்து நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குற்றவாளி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அந்நபருக்கு 1500 ரூபா அபாராதம் செலுத்துமாறும், 5 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் கூறித் தீர்ப்பளித்தார். (11)

# விசேட பரீட்சைக்கு ஏற்பாடு; தொழில்நுட்ப மாணவர்களுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலும் ஏனைய பகுதிகளிலும் உயர் தொழில் நுட்ப கல்லூரிகளில் 2002 ஆம் ஆண்டுக்கு முன் கல்வி கற்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களுக்கும் பரீட்சையைப் பூர்த்தி செய்யாத மாணவர்களுக்கும் மேலுமொரு சந்தர்ப்பத்தை உயர் தொழில் நுட்ப நிறுவனம் சிலயேற் (SLIAT) வழங்கியுள்ளதாக அந்நிறுவன யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது.

உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா, உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா, வர்த்தக டிப்ளோமா (HNIC), விவசாய மனைப்பொருள் டிப்ளோமா, வர்த்தகக் கல்வி டிப்ளோமா (HNDNS) ஆங்கில டிப்ளோமா (NDE) பாடநெறிகளில் எதிர் வரும் மே மாதத்தில் பரீட்சைகள் நடைபெறும் என சங்கச் செயலாளர் வி.தயாபரன் தெரிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சையைத் தவறவிட்ட மாணவர்கள் எவரும் நாடு தழுவிய ரிதியில் விண்ணப்பிக்க முடியும். மறு பரீட்சை மேலுமொருமுறை நடைபெறமாட்டாது. இது மனிதாபிமான அடிப்படையிலானதாகும்.

பரீட்சை தொடர்பான விபரங்களை www.jatialumini.org எனும் இணையத்தள முகவரியில் பெறலாம். விண்ணப்பப் படிவத்தை தலைமைக் காரியாலயத்தில் அல்லது www.sliate.net இல் பதிவிறக்கலாம்.

விண்ணப்ப இறுதித் திகதி ஏப்ரல் 8 ஆம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது. (23)

# வினைத்திறனை அதிகரிக்க விசேட பயிற்சி வகுப்புகள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம், ஊர்காவற்துறை ஆகிய நீதிமன்றங்களில் கடமை புரியும் 50 உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிநெறி இன்று முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியில் தாபன வேலைகள், கணக்கு வேலைகள், வழக்கு நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் குறித்து பயிற்சி வழங்கப்படவுள்ளது.

பல நிர்வாக சேவைகளைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரிகள், கணக்காளர் கலந்துகொண்டு விரிவுரைகளை வழங்கவுள்ளனர்.

நீதியமைச்சின் செயலாளரின் விசேட அனுமதியுடன் வட மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிறுவனத்தினால் நடத்தப்படும் இப்பயிற்சி நெறி, நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்கு விசேடமான தனியான பயிற்சிப்பட்டறையாக நடத்தப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

நீதிமன்ற உத்தியோகத்தர்களின் வினைத்திறனை அதிகரிப்பது, வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு இப்பயிற்சி மிகுந்த பயனுள்ள தாக அமையும் என நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (11)

# கருத்தரங்கு

(வேலணை)

வேலணை - சாட்டி வெள்ளைக் கடற்கரையில் இந்துமயான அந்தியேட்டி மட பரிபாலன சபையின் நிர்வாக கருத்தரங்கும், அதையொட்டி அந்தியேட்டி மடத்தினை பரிபாலனம் செய்வது பற்றிய கருத்துரை ஒன்று வேலணை பிரதேச சபையின் மண்டபத்தில் இன்று பிரதேச சபையின் செயலாளர் கெ. தவராசாவினால் நடத்தப்படவுள்ளது. (05)

# விசேட கணினிக் கல்வி மாணவர்களுக்கு சான்றிதழ்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு மற்றும் கண்டி மாவட்டங்களின் பிரபலமான பாடசாலைகளில் 'குழந்தைகளின் எதிர்காலம்' (Future Kids) எனும் மகுட வாசகத்துடன் பாடசாலையில் தரம் 1 இல் இருந்து உயர்தரம் வரையான மாணவர்களுக்கு கணணிக் கல்வியை அப் பாடசாலைகளுடன் இணைந்து தொழில் நுட்ப நிறுவனமான IIT என்ற ஸ்தாபனம் வழங்கி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக கடந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் சென். பத்திரிசியார் கல்லூரியுடன் இணைந்து யாழ் மாணவர்களுக்கும் இந்த வாய்ப்பை வழங்கியது.

இக்கறகையின் ஒரு படிநிலையினைப் பூர்த்தி செய்து கொண்ட மாணவர்களின் சான்றிதழ் வழங்கல் வைபவம் இப்பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அவ்வைபவத்தின்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட IIT யின் பொது முகாமையாளர் சந்தருவான் டீ சில்வாவினால் இப்பாடசாலை ஆசிரியர்கள் அனைவருக்கும் இலவசமாக கணணிக்கல்வியை தொடரவும், பழைய மாணவர்களுக்கு விசேட கட்டணக் கழிவுகளையும், இப்பாடசாலையில் கல்வி கற்கும் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கு இலவசமாக 'குழந்தைகளுக்கான எதிர்காலத்தை' தொடரவும் வாய்ப்பை வழங்கினார்.

இதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட சென். பத்திரிசியார் கல்லூரியின் அதிபர் வண. பிதா ம.ஜெறோ செல்வநாயகம் இவ்வாய்ப்புகளுக்கு நன்றிகளைத் தெரிவித்தார்.

# முதியோருக்கு விசேட கூட்டம்

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள முதியோர்களுக்கும் விசேட தேவையுடையோருக்குமான கூட்டம் எதிர் வரும் 9 ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் முதியோர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று நடத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்படவுள்ளதால், அனைத்து முதியோர் சங்க அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு செயலக சமூகசேவை உத்தியோகத்தர் இ.அருந்தவராசா அறிவித்துள்ளார். (104)

# வறுமைக்கோட்டுக்குட்பட்டவருக்கு புதிய வீடு கையளிப்பு

(வேலணை)

வறுமைக் கோட்டுக்குட்பட்டவர்களுக்கு வீடு வழங்கும் நிகழ்வொன்று நாளை காலை 8 மணிக்கு நயினாதீவில் இடம்பெறவிருக்கிறது.

நயினாதீவு - முதலாம் வட்டாரத்தில் இருக்கும் மிகவும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட ஒருவருக்கு சுமார் 3 லட்சத்துக்கு மேற்பட்ட செலவில் நயினாதீவு நாக விகாரையின் விகாராபதியின் ஏற்பாட்டின் பேரில் ஏற்கனவே நயினாதீவு நாக விகாரையின் முதலாவது விகாராபதி மறைந்த வண திஸ்ஸ மகாநாயக்க தேரோவினது 8 ஆவது ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட இந்த வீட்டினைக் கையளிக்கும் நிகழ்வு இடம்பெறவிருக்கிறது. (05)

# முட்டாள்கள் தினத்தில் இப்படியும் நடந்தது

(ஆனைக்கோட்டை)

முட்டாள்கள் தினமான நேற்று மானிப்பாய் பகுதியிலுள்ள பிரபல ஆண்கள் பாடசாலையில் உயர்தரம் கற்கும் மாணவர்கள் சிலர் நண்பகல் வேளையில் ஒருவருக்கொருவர் உஜாலா நீலம் தெளித்து விளையாடியதில் சினமடைந்த சில மாணவர்களுக்கிடையில் கைகலப்பு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவர்கள் பாடசாலை வாயிலில் நின்று இவ்வாறான இழிவான செயல்களில் ஈடுபடுவதைக் கண்டு அவ்வீதியால் சென்ற பொதுமக்கள் சிலர் பாடசாலை அதிபருக்கு தொலைபேசியூடாக தெரியப்படுத்தியதையடுத்து, அதிபர் பாடசாலை வாயிலில் வந்து பார்த்தபோது அம்மாணவர்கள் தப்பியோடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை மாணவர்கள் இவ்வாறான இழிவான செயல்களில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்க விடயம் என அப்பகுதி மக்கள் மனவருத்தத்துடன் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (104)

# மருதங்கேணியில் வீதி திருத்தம் எப்போது?

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மக்கள் மீள்குடியேறி ஏழு மாதங்கள் ஆகியும் வீதிகள் திருத்தப்படாமல் உள்ளன.

மாமுனை முதல் ஆழியவளை வரையான பிரதான சாலை இன்னும் திருத்தப்படாத நிலையில் உள்ளது.

சைக்கிள் செல்லமுடியாத பாதையில் பேருந்துகள் செல்வதாலும் பாதையெங்கும் தூசிகளைக் கிளப்பிவிடுவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்நாட்டு மக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல், நற்சிந்தனை ஆகியவற்றைப் பொறுத்தே இருக்கிறது.

-விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## காத்திருக்கும் பொறுப்புக்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது உபவேந்தராக பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் நியமனம் பெற்று தனது பதவியைப் பல்கலைக்கழகத்தில் வீற்றிருக்கும் பரமேஸ்வரனின் ஆசியுடன் பொறுப்பேற்றுள்ளார்.

பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் யாழ். பல்கலைக்கழகத்தின் முதலாவது பெண் உபவேந்தர் என்னும் பெருமைக்குரியவராக மதிக்கப்படும் ஒருவராவர்.

விஞ்ஞானத்துறையில் சிறப்புத் தேர்ச்சியுடன் 80களில் யாழ். பல்கலைக்கழகத்தில் கால்பதித்து பத்து ஆண்டுகள் உயிரியல் விஞ்ஞானப் பீடாதிபதியாகவும், மூன்று ஆண்டுகள் மருத்துவ பீடத்தின் பீடாதிபதியாகவும், பன்னிரெண்டு வருடங்கள் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும் இருந்து நீண்டதொரு பல்கலைக்கழக அனுபவத்துடன் உபவேந்தராக நியமனம் பெற்றுள்ளார்.

70 வீதமான பெண் மாணவர்களையும், 50 வீதமான பெண் ஆசிரியர்களையும் கொண்ட யாழ். பல்கலைக்கழகத்திற்கு, யாழ்ப்பாண சமூகத்தைப் பற்றி நற்குணர்ந்துள்ள பெண் ஒருவர் உபவேந்தராக நியமனம் பெற்றிருப்பது இன்றைய காலத்தின் தேவையாகும்.

இந்நிலையில், இவரிடம் இருந்து அதிகளவு சேவையை பல்கலைக்கழக சமூகம் எதிர்பார்த்து நிற்கிறது.

பல்கலைக்கழகத்தில் சகல துறைகளிலும் நிலவும் பல்வேறு பிரச்சினைகளை அனுகி ஆராய்ந்து அவற்றுக்குரிய தீர்வுகளைக் கண்டு அவற்றை சுமுகமான நிலையில் கொண்டு செலுத்துவதே தனது முக்கிய கடமை எனக் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்பது பல்கலைக்கழக கல்விச் சமூகத்தின் நீண்ட காலக் கனவாக உள்ளது. இக்கனவைத் தனது பதவிக் காலத்தில் நனவாக்க வேண்டிய பொறுப்பு இவருக்குண்டு.

விவசாயபீடம் இங்கு இருந்தாலும் ஏற்கனவே திட்டமிட்டவாறு கிளிநொச்சியில் உட்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைளில் கவனம் செலுத்துவதுடன், தற்போது வவுனியாவில் இயங்கிவரும் பல்கலைக்கழக வளாகத்தை முழுமையானதாக மாற்றுவதும் இவர் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும். இவற்றை உணர்ந்து அவர் செயற்படவேண்டும்.

முகாமைத்துவ பீடம், இராமனாதன் நுண்கலைப்பீடம், கைதடியில் உள்ள சித்தமருத்துவப் பீடம் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தி அவற்றைத் தனித்தன்மை வாய்ந்ததாக மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பல்கலைக்கழக ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரதும் தேவைகளை இனங்கண்டு அவர்கள் மத்தியில் நிலவும், பிரச்சினைகளுக்குப் புரிந்துணர்வுடன் சுமூகத் தீர்வுகாணும் பணியிலும் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

அத்துடன் யாழ். பல்கலைக்கழகத்தை எதிர்காலத்தில் சமூகத்துடன் ஒன்றிணைக்கும் திட்டங்களை வகுத்து யாழ்ப்பாண அபிவிருத்திக்குப் பல்கலைக்கழகம் பங்களிப்பு செய்வதற்க்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவையே தங்கள் பதவிக்காலத்தினை எடுத்துக் கூறும் நினைவுச் சின்னங்களாக விளங்க வேண்டும்.

-ஆசிரியர்-

# தினமுரசின் நடுநிலைத் தன்மையே அதன் வளர்ச்சிக்குக் காரணமாகும்

## சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

போர் இடம்பெற்ற காலங்களுக்கு முன்னர் பத்திரிகைகள், உள்ளூர் மட்டத்தில் வடக்கில் சிறந்த வீரர், வீராங்கனைகளத் தெரிவு செய்வது போன்ற பல போட்டிகளை நடத்தி வந்தன. இவ்வாறான போட்டிகள் மீண்டும் நடத்தி அதன் மூலம் வீரர்களை ஊக்கப்படுத்தி பிரபலப்படுத்த முடியும் என யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வண. ஞானப்பொன்ராஜா தெரிவித்தார்.

தினமுரசு நாளிதழினால் உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி 2011 ஐ முன்னிட்டு நடத்தப்பட்ட தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றியாளர்களைத் தெரிவுசெய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் தினமுரசு காரியாலயத்தில் நடைபெற்றபோது இந்நிகழ்வில் பிரதம மத்தியஸ்தராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

தினமுரசு பத்திரிகை நடுநிலமை, நேர்மை, உண்மைத் தன்மையுடன் வெளிவருவது மகிழ்ச்சி தருகின்றது. இதுவே ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்கு மூலகாரணமாகும். அந்த வகையில் தினமுரசுப் பத்திரிகை மேலும் வளர்ச்சியடைய எமது வாழ்த்துக்கள்.

இதுபோன்ற பல போட்டிகளை தினமுரசு நடத்தி அதன்மூலம் பத்திரிகைக்கும், வாசகர்களுக்கும் இடையிலான ஒரு பிணைப்பை ஏற்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நிர்வாக இயக்குநர் ஸ்ராலின் உரையாற்றுகையில்-

பரிசு பெரிதோ, சிறிதோ என்பது விடயமல்ல, அந்தப் பரிசு உரியவரைச் சென்றயடை வேண்டும். பெரிய அளவிலே பரிசுகளை வழங்குவதாகக் கூறிவிட்டு வாசகர்களை குறிப்பாகப் போட்டியாளர்களை ஏமாற்றக்கூடாது. நம்பிக்கையுடன் பங்குபற்றும் வாசகர்களை ஏமாற்றாது விசுவாசமாகப் போட்டிகளை நடத்த வேண்டும். அதன் மூலம் வாசகர்களிடத்தில் நம்பிக்கையைப் பெறமுடியும் எனத் தெரிவித்த அவர் போட்டிகளை முன்னின்று நடத்திய பணியாளர்களுக்கு நன்றிகளைக் கூறினார்.

இந்நிகழ்வில் விளையாட்டுப் போட்டிப் பொறுப்பாசிரியர் ஜெயரட்ணமும் உரையாற்றினார். (54)

## கல்விச் செயற்பாட்டுக்கு விரைவில் புதிய கட்டடம்

(சாவகச்சேரி)

உலக வங்கி நிதியுதவியுடன் 30 லட்சம் ரூபா செலவில் மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் செயற்பாட்டறை ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்செயற்பாட்டறையில் சங்கீதம், நடனம், மனையியல் போன்ற பாடங்களின் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் துரித நடவடிக்கையினால் இச்செயற்பாட்டறை அமைக்கப்பட்டுள்ளதால் நீண்டகாலமாக நிலவிவந்த இடநெருக்கடி தற்போது நீக்கப்பட்டுள்ளதாக பாடசாலைச் சமூகம் தெரிவிக்கின்றது. (11)

## புனரமைக்கப்படாத ஐயனார் ஆலயம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை - துண்டி ஐயனார் ஆலயத்தில் நித்திய பூஜைகள் நடைபெற்று வந்தாலும் கூட இந்த ஆலயம் கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றிக் காணப்படுவதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்தனர்.

மிகவும் பழமைவாய்ந்த இந்த ஆலயத்தின் நித்திய பூஜைகள் கடந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இந்த ஆலயத்தைப் புனரமைப்புச் செய்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பதற்கு சம்பந்தப்பட்டோர் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (வி)

# ரோலர் படகு மூலம் மீன்பிடிப்பதால் மீன் வளம் பாதிக்கப்படும் அபாயம்

## சம்மேளனத் தலைவர் தவரெட்ணம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி உபகரணங்களை குருநகர் மீனவர்கள் தொடர்ந்தும் பாவித்து வருவதாகவும், இதனால் கடல் பாதிக்கப்பட வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாகவும் யாழ்ப்பாணம் கடற்றொழிலாளர்களின் சம்மேளனத் தலைவர் தவரட்ணம் தெரிவித்தார்.

மீனவர்கள் எதிநோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

சட்டவிரோதமான "ரோலர்" இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் இவர்கள் சமாசத்துடன் எந்தவிதமான தொடர்புகளையும் மேற்கொள்ளாது, தன்னிச்சையாக செயற்பட்டு வருகிறார்கள். அது மட்டுமல்லாமல் பிரச்சினைகள் ஏற்படும் போதுகூட சமாசத்துக்கு எந்த விதமான தகவல்களையும் அவர்கள் வழங்கு வதில்லை.

இந்திய-இலங்கை மீனவர்கள் தொடர்பில் அண்மையில் புதுடில்லியில இடம்பெற்ற மாநாட்டிற்கு எங்களுக்கு எந்தவிதமான அழைப்புகளும் விடப்படவில்லை. மாநாடடு முடிவுகள் கூட எமக்கு அறிவிக்கப்படவில்லை.

ஆனால் கொழும்பில் இடம் பெற்ற மாநாட்டிற்கு எம்மை அழைத்து மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து விசாரித்து அறிந்து கொண்டார்கள் என்று அவர் மேலும் கூறினார். (21)

## தீயில் எரிந்த கடைகள்; பல லட்சம் ரூபா நட்டம்

யாழ்.முனீஸ்வரன் வீதியில் உள்ள நடைபாதைக் கடைகள் தீயில் திடீரென எரிந்து நாசமாகியது வேண்டும் என்றே மேற்கொள்ளப்பட்ட தீயசெயல் என வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தீயில் எரிந்து முற்றாக அழிந்த மூன்று வியாபார நிலையங்களில் பல லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த உடுபுடைவைகள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சித்திரைப் புத்தாண்டு வியாபாரத்திற்காக மேலதிக உடுபுடைவைகளையும் இந்த வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்வனவு செய்திருந்தனர்.

ஒரு கடைக்கு வேண்டுமென்றே தீயிட்ட சமயம் அது காட்டுத் தீபோல் பரவி ஏனைய கடைகளையும் பதம் பார்த்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் திடீர்த் தீ விபத்தைப் பற்றி பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகிறனர்.(வி)

## தொடர் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் நடத்தும் "அன்பின் சக்தி" என்னும் தொடர்சொற்பொழிவு ஆனைக கோட்டை, கொக்குவிலில் உள்ள நிலையத்தில் நாளை மாலை 4 மணி முதல் 6 மணி வரை நடைபெறவுள்ளது.

இச்சொற்பொழிவை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலைய மலேஷியப் பொறுப்பாளர் பி.கு. திருமணி ஜெகதீஸா நடத்தவுள்ளார். (21)

## சமாந்தரமாகச் சென்ற 07 பேருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சமாந்தரமாகச் சைக்கிளில் சென்ற பத்துப் பேரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்து யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர்படுத்தினர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் மூன்று பாடசாலை மாணவர்களும் உள்ளடங்குவார்கள்.

வழக்கை விசாரித்த நீதிபதி மூன்று மாணவர்களையும் எச்சரித்து விடுதலை செய்ததுடன், மீதி ஏழு பேருக்கும் தலா 500 ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார் (மி)

# பாடசாலைகளின் சிறந்த பெறுபேறே அதனை தரமுயர்த்துவதற்கு வழிசமைக்கும்



(யாழ்ப்பாணம்)
பாடசாலைகள் நல்ல பெறுபேறுகளை வெளிப்படுத்துகின்றபோதே அப்பாடசாலைகளுக்கான அதிகரித்த அபிவிருத்திச் செயற்பாடுகளும் முன்னெடுக்கபபடுகின்றது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின யாழ்மாவடட பாராளுமன்ற உறுபபினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் என்றிப் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்து உரையாற்றுகையிலேயே அவா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இப்பாடசாலை கல்விச் செயற்பாட்டில் அதிகரித்த நல்ல பெறுபேறுகளை வெளிக்காட்டும் போது தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து தருவதாகவும் தெரிவித்த சந்திரகுமார் பாடசாலைகளின் தேவைகளை அதிபர், ஆசிரியர்கள் மூலம் தெரிவிததுக் கொண்டதாகவும், அந்தத் தேவைகள் எதிர்காலத்தில் படிப்படியாகத் தீர்க்கப்படும் எனவும் அதன் முன்னோடியாக தற்போது இப்பாடசாலைக்கு ஒரு மின்பிறப்பாக்கி வழங்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் சிறிதரன் தமது தலைமையுரையில்:

கடந்த ஒரு சில வாரங்களுக்கு முன் எமது பாடசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள் விஜயம் மேற்கொண்டசமயம் போதியளவு வகுப்பறைக் கட்டடங்கள் இனறி மாணவர்கள் மழையில் அவதிப்பட்டுக் கொண்டிருந்ததனை நேரில் பார்வையிட்ட அவர், உடனடியாகவே உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு என்றிப் திட்டத்தின் கீழ் 4.7 மில்லியன் ரூபா பெறுமதியிலான நிரந்தர கட்டடம் ஒன்றினைப் பெற்றுத்தந்துள்ளார். எமது பாடசாலை வரலாற்றில் இந்த நாள் மறக்க முடியாத மகிழ்ச்சியான நாள். எனவே நாம் என்றும் எமது பாடசாலை சமூகம் மற்றும் இக்கிராம மக்கள் சார்பாக நன்றியுடையவர்களாக இருப்போம் எனவும் குறிப்பிட்டார்.

பாடசாலை அதிபர் சிறிதரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் முருகவேல், ஈ.பி.டி.பியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பிரதேச இராணுவ அதிகாரி, பாடசாலை அபிவிருத்திச்சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச தொடர்பாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கடையில் தாக்கப்பட்ட ஊழியர் வைத்தியசாலையில் அனுமதி

(யாழ்ப்பாணம்)
நல்லூர்ப் பகுதியில் கடையொன்றில் பணியுரியும் ஊழியர் ஒருவர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ள நிலையில் யாழ்போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

அக்கடையில் பணிபுரியும் குறித்த நபரின் கையடக்கத் தொலைபேசியை நேற்று பெண் ஒருவர் திருடிவிட்டதாக இவரால் குற்றம் சுமத்தப்பட்ட பெண்ணின் சகோதரன் குறித்த கடைக்காரரைக் கடுமையாகத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தில் நாயன் மார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த ச.செந்துரன் (வயது- 22) என்பவரே தாக்கப்பட்டு தலையில் படுகாயம் அடைந்துள்ள நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (மி)

## பாலங்களின் புனரமைப்புக்கென "போக்" குழாய்கள் எடுத்துவரப்பட்டன

(கைதடி)
யாழ்ப்பாணத்தின் பாலங்கள் புனரமைப்பிற்காக தெற்கில் இருந்து சிமெந்தினாலான "போக்"குழாய்கள் எடுத்துவரப்பட்டுள்ளன.

பிரதான வீதிகள் அகலிப்பு, புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதால் வீதிகளில் இருக்கும் பாலங்கள், கால்வாய்கள் என்பனவும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றன.

இதற்கென அவசரமாக "போக்" குழாய்கள் கனரக வாகனங்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.(வி)

## வாகன விபத்து

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் அச்சுக்கூட வீதியில் வாகன விபத்துச் சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் பிற்பகல் 10.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியிலுள்ள ஒழுங்கையிலிருந்து வந்த வான் எதிராக வந்த ஆட்டோ ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியதுடன், அதேசமயம் ஆட்டோவிற்கு முன்னால் வந்த லான்மாஸ்டருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக யாழ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

## க.பொ.த(சா/த) பரீட்சை பெறுபேறுகள்

யா/வைத்தீஸ்வராக்கல்லூரி. ஈஸ்வர சுந்திரகாந்தி தனுஜன் 7ஏ.சி, பாஸ்கரன் கோபிசா 4ஏ.பி,3சி.எஸ், செல்லத்துரை நவநீதா3ஏ.3பி.சி, அலெஸ்ரீன் மேரிநிசாந்தினி 3ஏ. 2சி.எஸ், நல்லை நாதன் சுஜிகரன் 2ஏ.3பி.4சி, கணேசலிங்கம் சிவனந்தன் 2ஏ.பி.4சி.எஸ், மனோகரன் நிதுசாளினி 2ஏ.பி.3சி.3எஸ், சுப்பிரமணியம் பிறேமாலினி 2ஏ.பி.3சி.3எஸ், சிறீகணேசராசா சஞ்சிகா 2ஏ.பி.3சி.2எஸ், மகேஸ்வரன் தக்சினி 2ஏ.பி. 2சி.4எஸ், அசோக்குமார் தரண்யா ஏ.பி.3சி.எஸ்.

## தரம்குறைவான நெல்லை நியாயவிலையில் கொள்வனவு செய்யுமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)
கிளிநொச்சியிலுள்ள நெல் சந்தைப்படுத்தல் சபை, தரம் குறைவான நெல்லை நியாய விலையில் கொள்வனவு செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட சீரற்ற காலநிலையின் போது அறுவடை செய்யப்பட்ட நெல் தரம் குறைவாகவுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நெல் சந்தைப் படுத்தல் சபை நெல்லின் தரத்தைப் பார்த்து கொள்வனவு செய்து வருகின்ற நிலையில் தரம் குறைவான நெல் சபையினால் கொள்வனவு செய்யப் படுவதில்லை எனத் தெரிவிக் கப்படுகின்றது.

எனினும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நெல்லின் தரம் குறைவாகக் காணப்படுகின்ற நிலையில் இவற்றை நெல் சந்தைப்படுத்தல் சபை நியாய விலையில் கொள்வனது செய்ய வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (28)

## மாணவத்தாதிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)
சுகாதார அமைச்சின் கீழ் மாணவ தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆட்சேர்த்துக் கொள வதற்கு தகுதியுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களைப் பெறறு பூர்த்தி செய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (நிர்வாகம்) 01, சுகாதார அமைச்சு, "சுவசிரிபாய" இல 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை 2011.04.01 வர்த்தக மானியிலோ அல்லது தினமுரசு காரியாலயத்திலோ பார்வையிடலாம்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### திறப்பு விழா

(வடமராட்சி)
கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட உபகரணங்களுடன் கூடிய கணித அறை திறப்பு விழாவும், பரிசில் வழங்கும் வைபவமும் இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா இதனைத் திறந்து வைக்கவுளளார். அத்துடன் 2010 ஆம ஆண்டு நடத்தப்பட்ட வலய மட்டக் கணித விநாடி வினாப போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப் படவுள்ளது. (100)

### கல்வித்தினம்

(பருத்தித்துறை)
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கல்வித்தினம் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக்கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா, திருமதி. குருகுலராஜா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

### மண்டலாபிஷேகப்பூர்த்தி

(யாழ்.நிருபர்)
யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை திருவருள்மிகு அங்குசபாச(கீரிப்) பிள்ளையார் தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி விழா எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் பகல் விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று பிற்பகல் 6.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் சுவாமி வெளிவீதி வலம் வரும் காட்சியும் இடம்பெறும்.(10)

### புதிய செயலாளர்

(வடமராட்சி)
பருத்தித்துறை நகரசபைக்கு இம் மாதம் முதல் புதியசெயலாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கரவெட்டி பிரதேச சபை பிரதம முகாமை உதவியாளர் செவ்வேள் புதிய செயலாளராக நியமிக்கப்படவுளளதாகவும் தற்போது கடமையில் இருக்கும் அ.நடராஜா ஓய்வு பெற்றுச் செல்வதை அடுத்தே இப் புதிய நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்டுகின்றது. (100)

### புத்தாண்டு நிகழ்வு

(ஆனைக்கோட்டை)
தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வுகளில் கலந்து கொள்வோரை உற்சாகப் படுத்தும் முகமாக யாழ்.மாவட்ட செயலகமும் வசந்தம் தொலைக்காட்சிச் சேவையுடன் இணைந்து எதிர்வரும் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவிலுள்ள வல்வெட்டிப்பிள்ளையார் ஆலய முன்றலில் நிகழ்வொன்றை நடாத்தவுள்ளன.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களும் கலந்து கொளளவுள்ளன. (104)



படம்: கார்த்திகேயன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக நேற்று பதவியேற்ற பேராசிரியை செல்வி வசந்தி அரசரட்ணம் பரமேஸ்வரன் ஆலயத்தில் குருக்களிடம் காளாஞ்சி பெற்றுக் கொள்வதையும், முன்னாள் பதில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கைலாகு கொடுத்து வரவேற்பதையும், கடமையைப்பொறுப்பேற்று ஆவணத்தில் கையொப்பம் இடுவதையும் காணலாம்.

# ஆலய வழிபாடுகளில் இளையோரின் பங்களிப்பு அதிகரிக்கப்படவேண்டும்

## நல்லை ஆதீன முதல்வர் அறிவுரை



(யாழ்.நிருபர்)

ஆலய மகோற சவங்கள், கும்பாபிஷேகம் போன்ற விசேட நிகழ்வுகளில் பிளைகள் கலந்து கொண்டு வழிபாடு செயவதற்குப் பெற்றோர் ஊக்குவிக்க வேண்டும். இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெரும்பாலான ஆலயங்கள் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. ஆனால் கும்பாபிஷேக நிகழ்வுகளில் இளைய தலைமுறையினரின் பிரசன்னம் குறைவாகவேயுள்ளது.

இவ்வாறு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை திருவருள்மிகு அங்குசபாச (கீரிப்) பிள்ளையார் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்ச குண்டபட்ஷ மகாகும்பாபிஷேக நிகழ்வில் கலந்துகொண்டு அருளாசியுரை வழங்கிய நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து ஆசியுரை வழங்கும் போது கூறியதாவது -

சைவமக்கள் தினமும் ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்யவேண்டும். தினமும் செல்ல முடியாதவர்கள் விசேட நாட்கள், மகோற்சவங்கள், கும்பாபிஷேகம் போன்ற நிகழ்வுகள் நடைபெறும் போதாவது ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு செய்யவேண்டும். இத்தகைய தினங்களில் ஆலய வழிபாடு செய்ய வருவோர் ஆடம்பரங்களைத் தவிர்த்து பக்தி பூர்வமாக வழிபாடுகளைச் செய்ய வேண்டும்.

ஆலயத்தின் உபதலைவர் சொல்லின் செல்வர் இரா.செல்வ வடிவேல் உரையாற்றும் போது, இன்று ஆலயங்களில் பெரும் பொருட் செலவில் கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. செலவுகள் அதிகரித்துச் செல்வதில் எதிர்காலத்தில் சிறிய ஆலயங்கள் கும்பாபிஷேகமே செய்ய முடியாத நிலை தோனறலாம்.

யாழ்.குடாநாட்டுக் கோயில்களில் திருவிழாக்கள் ஆடம்பரத்தின் உச்சிக்கே சென்று விடுகின்றன. போட்டி போட்டு பெரும் பணச் செலவில் சிலர் ஆலயங்களில் திருவிழாக்களைச் செய்து வருகின்றனர். திருவிழாச் செலவுகள் அதிகரிக்கும்போது எதிர்காலத்தில் திருவிழாச் செய்யக்கூடிய உபயகாரர்களைத் தேடி அலய வேணடிய நிலை ஏற்படலாம். எங்கள் ஆலயம் சிறியது. பணவசதி கிடையாது, விநாயகரை மனதில் நிலைநிறுத்தி பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. பிள்ளையார் திருவருளால் சில அன்பர்களின் நிதியுதவியுடன் திருப்பணி வேலைகள் ஆரம்பித்துத் தேவையான திருத்த வேலைகள் மட்டும் மேற்கொள்ளப்பட்டு சிறப்பான முறையில் அளவான செலவுடன் பஞ்சகுணடங்கள் வைக்கப்பட்டு மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

# இருபாலை வீதி விபத்தில் இருவர் படுகாயம்


(யாழ்ப்பாணம்)

இருபாலை பழைய வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹையேஸ் வாகனமும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டமையாலேயே இவ் விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணஞ் செய்த இருபாலை வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த ந.கோகுலன் (வயது -19) என்பவரே படுகாயமடைந்துள்ள நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (மி)






இலங்கை போக்குவரத்துச் சபையின் வடபிராந்திய பொதுமுகாமையாளராக நேற்றுப் பதவியேற்ற க.கேதீசன் ஊழியர்களால் அழைத்து வரப்படுவதையும், இளைப்பாறிய பிராந்திய பொது முகாமையாளர் எஸ்.கணேசபிள்ளை கைலாகு கொடுத்து வரவேற்பதையும் காணலாம். (படம்:கார்த்திகேயன்)

# இலங்கை அணி வெற்றிபெறவேண்டி யாழ்ப்பாண மக்கள் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற வேண்டும் என நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றுள்ளது.

இன்று நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்கு பற்றும் வீரர்களின் நலன்களுக்காகவும் இந்த வழிபாடுகள் இடம் பெற்றுள்ளது.

ஒரு சில இடங்களில் இராணுவத்தினரும் கிரிக்கெட் ரசிகர்களும் இந்தப் பூசை வழிபாடுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (02)

# இருவேறு குற்றங்களுக்காக 32 ஆயிரம் ரூபா அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிவந்த லொறிச் சாரதி உட்பட மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த மூவரையும் சாவகச்சேரிப் பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த 3 பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும், செலுத்தத் தவறின் லொறியை 2 மில்லியன் ரூபா பிணையில் எடுத்துச் செல்லுமாறு உத்தரவிட்டதுடன் வாகன உரிமை தொடர்பான விசாரணையை எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

இதேவேளை, குறித்த தினத்தன்று சாவகச்சேரிப் பகுதியில் சமாந்தரமாக சைக்கிளில் சென்ற இருவருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டார். (11)

# அரியாலை பூம்புகார் பகுதி மக்களுக்கு நல்லூர்ப் பிரதேச சபை குடிநீர் விநியோகம்

(அரியாலை)

அரியாலை பூம்புகார் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு குடிநீரை நல்லூர் பிரதேச சபையினர் விநியோகித்து வருகின்றனர். பவுசர் வாகனம் மூலம் இந்தக் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய கடும் வரட்சியால் இப்பிரதேச மக்களுக்குக் குடிநீர்த் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்யும் வகையில் தாராளமாகக் குடிநீர் வழங்கப் பட்டு வருகின்றது.

மேற்படி பகுதி மக்கள் குடிநீரின்றிக் கஷ்டப்படுவதாக தினமுரசு சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வி)

# குப்பைகள் தேங்கிக் கிடப்பதால் டெங்குநோய் பரவும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் கோம்பையன் மயானத்திற்கு அருகில் குப்பைகள் தேங்கிக் காணப்படுவதால், டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் பெருமளவான கழிவுப் பொருட்கள் தேங்கிக் காணப்படுவதால் அந்த வீதியால் பயணிக்க முடியாதளவிற்கு துர்நாற்றம் வீசுகின்றது.

அத்துடன், இலையான்களின் பெருக்கமும் அதிகமாகக் காணப்படுகின்றது. இந்தக் குப்பைகளை அகற்றுவதற்கு யாழ். மாநகரசபை உரிய நடவடிக்கை எடுக்கத் தவறின், குறித்த பகுதிகளில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புக்கள் ஏற்படும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர். (02)

# கோட்ட மட்டப் போட்டிகள் இந்து மகளிர் கல்லூரியில்

(யாழ்.நிருபர்)

நல்லூர் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

கட்டுரை வரைதல், எல்லாப் பிரிவுகளுக்கும் நடைபெறும். மற்றும் இலக்கிய நயத்தில் கட்டுரை வரைதல், தமிழியல் கட்டுரை இலக்கியம் எழுதுதல், இலக்கணப்போட்டி, திறனாய்வுப் போட்டி, குறுநாடக ஆக்கம், கவிதை, சிறுகதை எழுதுதல் ஆகிய போட்டிகளும் நடைபெறும்.

மேற்படி போட்டிகளுக்கு விண்ணப்பித்த அனைத்துப் பாடசாலை மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா தெரிவித்துள்ளார். (10)

## ஆதினியின் இன்றைய பலன்

(02.04.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்க்ள்**

விகிர்தி பங்குனி 19

இராகுகாலம் 9.11–10.41, சுபநேரம் 3.11–4.41

சதுர்த்தசி பி.ப.6.39, பூரட்டாதி மரண

யோகம் பி.ப.12.23 கரிநாள்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** அதிக முயற்சி, பணவரவு, மனதில் மகிழ்ச்சி.

**ரிஷபம்:–** சோம்பல் மிகுதி, காரியக்கேடு, நட்டம்.

**மிதுனம் :–** செய்தொழில் விருத்தி, பெரியோர் பாராட்டு, முயற்சி பலிதம்.

**கடகம்:–** தொழிலால் லாபம், நண்பர் உதவி, பொருள் வரவு.

**சிம்மம்:–** உற்சாக மிகுதி, காரியங்கள் சித்தி, நண்பர் சேர்க்கை.

**கன்னி :–** உதவிகள் பெருகல், மதிப்பு உயரல், உற்சாக மிகுதி.

**துலாம் :–** சலனக் குறைவு, பொருள் இழப்பு. வாகன விபத்து.

**விருச்சிகம்:–** ஆரோக்கிய மிகுதி, முயற்சி பலிதம், கொண்டாட்டம்.

**தனுசு:–** அனுசரித்து நடத்தல், அமைதியில் விருப்பு, தெய்வ வழிபாடு.

**மகரம்:–** உதவிகள் சேரல், பிறர்க்குதவி, களியாட்ட விருப்பு.

**கும்பம் :–** ஆரோக்கிய மிகுதி, உற்சாகமான செயல், மதிப்பு உயரல்.

**மீனம்:–** நினைத்த காரியச் சித்தி, மன மகிழ்ச்சி, சுற்றுலா.



உலகக் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இன்று மோதவுள்ள இலங்கை, இந்திய அணிகளின் தலைவர்கள் கிண்ணத்துடன்...

# விமானப் பறப்புக்குத் தடை

(மும்பை)

கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதிப் போட்டி இன்று மும்பையில் நடைபெற உள்ளது. போட்டியை இலங்கை அதிபர் ராஜபக்ஷ, இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீல் ஆகியோர் நேரில் கண்டுகளிக்க உள்ளனர்.

இதனையடுத்து வாங்டே கிரிக்கெட் மைதானம் அமைந்துள்ள தெற்கு மும்பை பகுதியில் விமானங்கள்பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முப்படைகளும் இணைந்து இறுதிப்போட்டிக்கான பாதுகாப்பை மேற்கொள்ள உள்ளதாக பொலிஸ் அதிகாரி அரூப் பட்னாயக் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே மாநில அரசு மும்பை மற்றும் புறநகர் பகுதிகளுக்கு உள்ளூர் விடுமுறை அளித்து உத்தரவிட்டுள்ளது. பொது மக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்தக்கொண்டு அவரவர் வீடுகளில் தொலைக்காட்சி மூலம் போட்டியைக்



காண வேண்டும்.இறுதிக் கட்ட நிலையில் மைதானத்தில் டிக்கெட் விற்பனை கிடையாது. முப்படைகளுடன் இணைந்து மாநில போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளதாக தெரிவித்த அவர் மைதானத்திற்குள் கேமராக்கள், தண்ணீர் போத்தல்கள் கொண்டு வர அனுமதி கிடையாது. அதே சமயம் செல்போன், மருந்துப் பொருட்களுக்கு அனுமதி வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

# வரலாறு காணாத பாதுகாப்பு

(மும்பை)

மும்பையில் இன்று நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு வரலாறு காணாத பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதனால் மும்பை நகரமே பாதுகாப்புப் படையின் கட்டுப்பாட்டு வளையத்துக்குள் வந்துவிட்டது.

இந்த ஆட்டத்தைக் காண குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டீல், இலங்கை அதிபர் ராஜபக்ஷ ஆகியோர் வருகின்றனர். மேலும் ஏராளமான முக்கிய தலைவர்களும் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 32 ஆயிரம் பேர் அமர்ந்து ஆட்டத்தைக் காணக்கூடிய இந்த மைதானத்தைச் சுற்றிலும் பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

மும்பை நகர் முழுவதும் தீவிர சோதனை நடத்தப்பட்டு வருகிறது. வான்கடே மைதானம் அமைந்துள்ள பகுதியில் விமானம் பறக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது. மைதானத்திற்கு உள்புறத்திலும், வெளிப்புறத்திலும் 180இக்கும் மேற்பட்ட கண்காணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. பார்வையாளர்களைக் கண்காணிப்பதற்காக சிறப்பு பொலிஸ் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது.

. கண்காணிப்புப் பணியில் ஹெலிகொப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. கடல் மார்க்கமாக மும்பைக்குள் நுழையும் அனைத்துப் பகுதிகளும் இறுதி ஆட்டம் நடைபெறும் இன்று வரை மூடப்படுகின்றன. ஆட்டம் நடைபெறும் போது மைதானத்தில் இருந்து 2 கி.மீ.தொலைவுக்கு பல அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கும். போட்டியைக் காணவரும் ரசிகர்கள் மைதானத்திற்குள் உணவுப் பொருள்களை எடுத்து வருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. வேதிப் பொருள்களைப் பயன்படுத்தி பயங்கரவாதிகள் நாசவேலைகளில் ஈடுபடக்கூடும் என்பதால் குடிநீர் பாட்டில்கள் எடுத்து வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.



மைதானம் இருக்கும் பகுதியில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு வாகனங்கள் வருவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

தனியார் வாகனங்களுக்குப் பதிலாக அரசு பஸ்களை பயன்படுத்துமாறு ரசிகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். போட்டியைக் காண வருபவர்களுக்காக சிறப்பு பஸ் வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## படம்பிடிக்கத் தடை

(மும்பை)

இந்தியா-இலங்கை இடையிலான உலகக் கிண்ண இறுதிப் போட்டியைப் படம்பிடிக்க இந்திய தொலைக்காட்சிகளுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடை விதித்துள்ளது.

மைதானத்திற்குள் அனைத்து இந்தியத் தொலைக்காட்சிகளுக்கும் வழங்கப்பட்டிருந்த அனுமதியை ஐ.சி.சி. நேற்று ரத்துச்செய்தது.

மத்திய தகவல், ஒலிபரப்பு அமைச்சகம் தலையிட்டபோதும் ஐ.சி.சி. இவ்வாறு அனுமதியை ரத்துச்செய்துள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின் ஐ.சி.சி. தலைவர் சரத்பவாரின் கவனத்துக்கு இந்த விவகாரத்தை தகவல், ஒலிபரப்பு அமைச்சர் அம்பிகா சோனி எடுத்துச் சென்றார். அதன் பின்னரும் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

## கிண்ணத்தை வெல்ல பிரார்த்திக்குக!

(புதுடில்லி)

இந்திய அணி, உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்று அனைவரும் பிரார்த்திக்குமாறு, பிரதமர் மன்மோகன் சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் கூறியதாவது, இன்று நடைபெற உள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில், இலங்கையை வென்று கிண்ணத்தைக் கைப்பற்றும். இதில் எவ்வித சந்தேகமுமில்லை. 1983ஆம் ஆண்டு நினைவுகள் மீண்டும் மலர உள்ளது.

இதனை நாம் அனைவரும் கண்டு களிக்கக் தயாராக உள்ளோம். இந்திய அணி சிறப்பாக செயற்பட்டு வருகிறது. இந்திய அணியை அனைவரும் வாழ்த்துமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை. இலங்கையிலும் அதன் ரசிகர்கள் முதல் கொண்டு அனைவரும் பிரார்த்தனைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சச்சினுக்காக உண்ணாவிரதம்

(மும்பை)

பாகிஸ்தானுக்கு எதிரான உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் அரை இறுதிப் போட்டியின்போது இந்தியாவுக்காக பிரபல பாடகி லதா மங்கேஷ்கர் உண்ணாவிரதம் இருந்துள்ளார்.

தற்போது தனது அபிமான வீரர் சச்சின் டெண்டுல்கர் இன்று நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் சதம் அடிக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறார்.


அரை இறுதிப் போட்டி முழுவதையும் நான் பார்த்தேன். மிகவும் பதட்டமாக இருந்தது. இந்தியா விளையாடும்போது என் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் சில மூட நம்பிக்கையைப் பின்பற்றுவர். நானும், குடும்பத்தில் உள்ளவர்களும் அரையிறுதிப் போட்டியின்போது சாப்பிடவும் இல்லை. தண்ணீரும் அருந்தவில்லை. இந்தியாவின் வெற்றிக்காகத் தொடர்ந்து பிரார்த்தனை செய்தேன். இந்தியா வெற்றிபெற்றதும்தான் உணவு உட்கொண்டோம் என லதா பி.ரி.ஐ. செய்தி நிறுவனத்திடம் தொலைபேசி மூலம் தெரிவித்தார். நான் மைதானத்துள் செல்ல



மாட்டேன். வீட்டில் இருந்தபடியே போட்டியைக் காண்பேன். இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள இரு அணிகளுமே திறமையானவை. கிரிக்கெட்டில் முடிவுகளை முன்கூட்டியே கணிக்க முடியாது எனக் குறிப்பிட்டார்




## எகிறிய ரிக்கெட் விலை



(மும்பை)

உலகக் கிண்ணக் கிரிக்கெட்போட்டியின் இறுதிப்போட்டிக்கான டிக்கெட்விலை ஒன்றேகால் லட்ச ரூபாய் (இந்திய மதிப்பில்) என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது.

இன்று நடைபெறவுள்ள இறுதிப் போட்டியைக் காண்பதற்கு ரசிகர்கள் மிகுந்த ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கின்றனர்.

அரையிறுதிப்போட்டியில் பாகிஸ்தானை வென்ற பின்னர் இந்தியா கிண்ணத்தை வெல்லும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே அதிகரித்துக் காணப்படுகிறது. இதனால் போட்டியை நேரில் காண்பதற்கு பணத்தைத் தண்ணீராகச் செலவழிக்கத் தயாராக உள்ளனர். சாதாரண நிலையில் இறுதிப்போட்டிக்கான டிக்கெட் ஒன்றின் விலை 35 ஆயிரமாக இருந்தது. தற்போது எதிர்பார்ப்பு அதிகரிப்பு காரணமாக அதன் விலை ஒன்றேகால் லட்சரூபாயாக அதிகரித்துள்ளது.போட்டி நடைபெற ஒரு நாள் இடைவெளி இருப்பதால் டிக்கெட் விலை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## தோல்வியால் துவளும் அப்ரிடி

(கராச்சி)

உலகக் கிண்ண தொடரின் அரையிறுதியில், இந்திய அணியுடனான போட்டியில் தோல்வியடைந்ததையடுத்து, மேற்கிந்தியத்தீவுக்கு எதிரான தொடரை தவிர்க்க முடிவு செய்திருப்பதாக பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளதாவது, இந்தியாவிடம் அடைந்த தோல்வியை அடுத்து, பாகிஸ்தான் அணி வீரர்கள் மனமுடைந்துள்ளதாகவும், அவர்களுக்குத் தற்போதைய அளவில் ஓய்வு தேவைப்படுகிறது. இதனால் இந்தத் தொடரை ரத்து செய்யுமாறு தலைவர் அப்ரிடி கேட்டுக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக, பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. வரும் 21ஆம் திகதி இந்த தொடர் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது



## மகள்களும் கலக்கம்

(கராச்சி)


உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் மொகாலியில் நடைபெற்ற அரை இறுதிப் போட்டியில் இந்திய அணி 29 ரன் வித்தியாசத்தில் பாகிஸ்தானை வீழ்த்தி போட்டியை விட்டு வெளியேற்றியது. இந்தத் தோல்வியால் அப்ரிடியும் அவரது பிள்ளைகளும் சோகத்தில் உறைந்துள்ளனர்.

இது குறித்து அப்ரிடியின் மூத்த மகள் அக்சா கூறுகையில், அரை இறுதியில் பாகிஸ்தான் அணி தோல்வியைச் சந்தித்தது மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது. இந்திய அணியை வீழ்த்துவோம் என்று மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்தேன் என்று கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

ப்ரிடியின் இளைய மகள் கருத்துத் தெரிவிக்கையில், வேகமாக ஓட்டங்கள் குவிக்க வேண்டியது அவசியம் என்பதை மிஸ்பா விரைவில் உணர்ந்து இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

# வெல்லப்போவது யார்?


1975



1979



1983



1987



1992





(மும்பை)

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி இன்று மும்பை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் இந்திய- இலங்கை அணிகள் மோதுகின்றன. ஆசியக் கண்டத்தைச் சேர்ந்த இரு அணிகள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் மோதுவது இதுவே முதல் முறையாகும். இரு அணிகளும் ஏற்கனவே ஒருமுறை உலகக் கிண்ணத்தை வென்றுள்ளன. இந்திய அணி 1983ஆம் ஆண்டும், இலங்கை அணி 1996ஆம் ஆண்டும் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளன..

இரண்டாவது முறையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்ற இரு அணிகளுமே கடுமையாகப் போராடும். இதனால் இன்றைய இறுதிப்போட்டி விறுவிறுப்பாகவும், மிகவும் பரபரப்பாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் போட்டியில் விளையாடும் இரண்டு ஆசிய அணிகளையும் குறைத்து மதிப்பிட முடியாது.

இரண்டு அணிகளுமே லீக் போட்டிகளில் ஒவ்வொரு தோல்வியைச் சந்தித்துள்ளன. காலிறுதி, அரையிறுதிப் போட்டிகளில் இரண்டு அணிகளும் பலம் வாய்ந்த அணிகளை வீட்டிற்கு அனுப்பிவிட்டு இன்று இறுதிப் போட்டியில் மோதுகின்றன.

குறிப்பாக இலங்கை அணி, நியூசிலாந்தையும், இந்திய அணி பாகிஸ்தானையும் தோற்கடித்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணி முதலில் துடுப்பாட்டம் செய்தாலும், இரண்டாவது துடுப்பாட்டம் செய்தாலும் சிறப்பாக ஆடக்கூடியது. அந்த அணி இங்கிலாந்துக்கு எதிரான காலிறுதியில் 230 ஓட்ட இலக்கை விக்கெட் இழக்காமல் வென்றது.

இலங்கை அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய 3 துறையிலும் சிறந்து விளங்குகிறது. தொடக்க ஜோடியும், நடு வரிசையும் அபாரமாக உள்ளது. இத்தொடரில் அதிக ஓட்டங்கள் எடுத்தவராக டில்சான் (467) உள்ளார். இதேபோல ஜெயவர்த்தன, சமரவீரா, சாமரசில்வா போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் அந்த அணியில் உள்ளனர்.

இலங்கை அணியில் மலிங்க, முரளிதரன் சிறப்பாக பந்து வீசக்கூடியவர்கள். முரளிதரன் முழு உடல் தகுதியுடன் இல்லை. என்றாலும் தனது கடைசிப் போட்டி என்பதால் ஆடுவார். மத்தியூசுக்குப் பதிலாக ரந்தீவ் அல்லது சமிந்த வாஸ் அல்லது குலசேகரா இடம்பெறலாம். வெற்றி, தோல்வி என்பதற்கு அப்பால் விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாத ஆட்டமாக நிச்சயம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய அணியையும் குறைத்து மதிப்பிட முடியாது. அந்த அணியின் தொடக்க வீரர்களான சேவாக், சச்சின் ஆட்டம் சூடுபிடித்தால் எதிரணி அவர்களைக் கட்டுப்படுத்துவது கடினம். இதிலும் சேவாக்கின் விக்கெட்டை வீழ்த்துவதே எதிரணியின் முக்கிய இலக்காக இருக்கும்.

இந்த ஆரம்ப ஜோடியைத் தவிர ஏனைய வீரர்களான கம்பீர், ஹோலி, யுவராஜ்சிங், டோனி எனத் துடுப்பாட்டப் பட்டியல் இந்திய அணிக்கு நீண்டது.

அதேபோன்று சகீர்கான் தலைமையிலான பந்து வீச்சு வீரர்களும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்திய அணி தனது சொந்த மைதானத்தில் விளையாடுவதால் ரசிகர்களின் ஆதரவு பலமாக இருக்கும் அதேவேளை, இலங்கை அணி இந்திய மண்ணில் இதுவரை தொடர் எதனையும் கைப்பற்றாத நிலையில், இன்றைய போட்டி அதற்கு முற்றுப் புள்ளி வைக்குமா எனவும் இலங்கை அணி ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பாக உள்ளது.


இந்தப் போட்டியுடன் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் ஓய்வுபெறவுள்ளமையும், பெரும்பாலும் சச்சினுக்கும் இது இறுதி உலகக் கிண்ணப் போட்டியாக அமையவுள்ளமையும் இரு அணிகளும் கிண்ணத்தை இருவருக்காகவும் வெல்வதற்காக கடும் போட்டியில் ஈடுபடும் என்பதும் விளையாட்டு ஆர்வலர்களுக்கு மேலும் ஆர்வத்தைத் தூண்டியுள்ளது.

எவ்வாறெனினும் சமபலமுள்ள இரு ஆசிய அணிகள் மோதுவதென்பது ரசிகர்களுக்கு விருந்ததாகவே அமையப்போகின்றது.


1996




1999



2003



2007



2011

?

## சொன்னதைச் செய்தோம்



(மும்பை)


சரியான நேரத்தில் எழுச்சி பெறுவோம் என இத்தொடரின் ஆரம்பத்தில் கூறினேன். அதுபோல ஒவ்வொரு போட்டியிலும் போராடி வென்று வந்துள்ளோம். இது அவ்வளவு எளிதானதல்ல. இறுதிப் போட்டியிலும் இது தொடரும் என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளோம். நாம் கிண்ணத்தை வெல்லவேண்டும் என்றுதான் எல்லோரும் விரும்புகின்றனர். இந்நிலையில் தேசத்துக்காகப் போட்டிகளில் பங்கேற்கும் போது, எந்த ஒரு வீரரையும் யாரும் ஊக்குவிக்க வேண்டும் என்ற தேவையில்லை.

இலக்குகளை விரட்டியது உட்பட, அனைத்துப் பிரிவுகளிலும் அணியின் திறமையைச் சோதித்துப் பார்த்துவிட்டோம். தற்போது இறுதிப் போட்டிக்குத் தயாராகியுள்ளோம்.

இறுதிப் போட்டி குறித்து பல்வேறு வகையான கருத்துக்கள் நம்மைச் சுற்றி உலவுகின்றன. இந்தச் செய்திகளில் நமது கவனத்தைச் சிதறச்செய்து விடக்கூடாது. ஏனெனில் எல்லோரும் தொழில் ரீதியிலான கிரிக்கெட் வீரர்கள், அதனால் இறுதிப் போட்டியில் சிறப்பான கிரிக்கெட்டை வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

## சவாலை எதிர்கொள்ளத் தயார்



(மும்பை)

இறுதிப்போட்டியை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பது குறித்து நல்ல விதமாக ஆலோசித்து இருக்கிறோம். இது எங்களுக்கு மிகப்பெரிய ஆட்டம். இந்தியாவின் சவாலை எதிர்கொள்ள நாங்கள் தயார். மிகுந்த நம்பிக்கையுடன் நாங்கள் இறுதிப்போட்டிக்குள் செல்கிறோம். எங்களது வீரர்கள் உணர்ச்சிப் பெருக்குடனும், உற்சாகத்துடனும் உள்ளனர். இவ்வாறு இலங்கை அணியின் துணைத் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: நியூசிலாந்துக்கு எதிரான அரையிறுதி ஆட்டத்தை நேர்மறை வியூகங்களுடன் அணுகினோம். இதில் எங்களது துடுப்பாட்டம் அற்புதமாக இருந்தது. ஆனால் இறுதிக் கட்டத்தில் அவர்கள் நெருக்கடி அளித்ததால், சில ஓவர்களில் எங்களுக்குத் தள்ளாட்டம் ஏற்பட்டது.

நிறைய வீரர்களுக்கு இலங்கை அணிக்காக விளையாட வேண்டும் என்பது தான் கனவாக இருந்தது. ஆனால் இப்போது அவர்கள் உலகக் கிண்ணத்தை வெல்லும் நிலைக்கு நெருங்கிவிட்டார்கள். இலங்கை அணிக்காக உலகக் கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற சிந்தனையுடன் தான் உலகக் கிண்ணப் பயணத்தைத் தொடங்கினோம். அதில் மாற்றம் செய்ய நாங்கள் விரும்பவில்லை என்றார்.


## நடுவர்கள் அறிவிப்பு

ICC Cricket World Cup 2011

(மும்பை)

பத்தாவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கான நடுவர்கள் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அவுஸ்திரேலியாவின் சைமன் டபெல், பாகிஸ்தானின் அலீம் தார் ஆகியோர் கள நடுவர்களாகவும், நியூசிலாந்தின் ஜெப் குரோவ் போட்டி நடுவராகவும், இங்கிலாந்தின் இயன் கோல்ட், ஸ்டீவ் டேவிஸ் ஆகியோர் முறையே மூன்றாவது மற்றும் நான்காவது நடுவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

## இன்று விளையாடுவார்



(மும்பை)

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையில் இன்று இடம்பெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் முத்தையா முரளிதரன் விளையாடுவார் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இன்றைய போட்டிக்கு முரளிதரனின் சேவை அத்தியாவசியமானது என்று இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் டிரெவர் பெய்லிஸ் வலியுறுத்தியுள்ளார். .15 பேர் கொண்ட அணியில் மத்தியூஸ் நீக்கப்பட்டு, ரண்டீவ் சேர்க்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## முழுக்கவனத்தையும் செலுத்துவோம்

(மும்பை)

களத்தில் உச்சகட்ட ஆட்டத்தை வெளிப்படுத்த என்ன செய்ய வேண்டும் என்பதில் முழுக் கவனத்தையும் செலுத்தினால், அதன் பிறகு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும். அப்படி முழுத் திறமைக்கு ஏற்ப விளையாடினால் எங்களை வீழ்த்துவது மிகவும் கடினம் என இலங்கை அணியின் பயிற்சியாளர் டிரெவர் பெய்லிஸ் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலைமையில் இரு அணிக்கும் வெற்றி வாய்ப்பு சரிசமமாக உள்ளது. ஆனால் உள்ளூரில் நடப்பதால் இந்தியாவுக்கு நெருக்கடி அதிகமாக இருக்கும். கடந்த 3 ஆண்டுகளாக இந்தியாவுடன் நாங்கள் 35 ஆட்டங்களில் விளையாடி இருக்கிறோம். நிறைய ஆட்டங்களில் இந்தியாவை வென்றிருக்கிறோம். எங்களது வீரர்கள் சிறப்பாக விளையாடி இந்தியாவைத் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்கள். உலகில் எந்த அணியையும் தோற்கடிக்கக் கூடிய திறமை எங்கள் அணிக்கு இருக்கிறது. இருப்பினும் இந்தியாவுக்கு எதிரான இறுதிப்போட்டி எங்களுக்கு கடினமான பணியாகும். எங்களுக்குக் கடினமான பணி தரப்பட்டிருக்கிறது என்றார்.

## நாணயச் சுழற்சியில் வெற்றி

(மும்பை)

ஒரு நாள் போட்டிக்கு ஏற்ற ஆடுகளமாக இது இருக்கும். முதலில் துடுப்பாடும் அணி 270 முதல் 280 ஓட்டங்களைக் குவித்தால் அது நல்ல இலக்காக இருக்கும். ஆரம்ப கட்ட ஓவர்களில் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அனுகூலமாக இருக்கும் என மும்பை மைதானத்தின் ஆடுகளப் பராமரிப்பாளர் சுதிர் நாயக் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலில் துடுப்பாட்டம் செய்யும் அணிக்கு கூடுதல் சாதகமான அம்சங்கள் கிடைக்கும். இரண்டாவது இன்னிங்சில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு ஆடுகளம் உதவிகரமாக அமையும். ஆனால் பந்து ரொம்ப அதிகமாக சுழன்று திரும்பாது. மெதுவாகத்தான் திரும்பும். காலையில் வெயில் அதிகமாக இருக்கும் என்பதால், மாலையில் காற்றில் ஈரப்பதம் அதிகமாகி அது இரண்டாவது இன்னிங்சில் துடுப்பாட்ட வீரர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும் பனிப்பொழிவின் தாக்கத்தை கட்டுப்படுத்த ரசாயன ஸ்ரே பயன்படுத்தப்படும். எனவே, நாணயச் சுழற்சியில் வெற்றிபெறும் அணிக்கு கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு அதிகம் இருக்கும் என்றார்.

# நேர்மையான தேர்தலை நடத்துவதற்கு திணைக்களத்திற்கு உரிமை உண்டு

## சென்னை நீதிமன்றம் தீர்ப்பு

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தலை நேர்மையாகவும் , நியாயமாகவும் நடத்தி முடிக்க வேண்டும் என்பதால் தேர்தல் திணைக்களம் எடுக்கும் நடவடிக்கைக்குத் தடை விதிக்க முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்து விட்டது . தேர்தல் திணைக்களம் சர்வாதிகாரமாக நடந்து கொள்கிறது என்றும், சோதனை என்ற பெயரில் மக்களைத் துன்புறுத்துவதாகவும் எனவே தேர்தல் திணைக்களத்தின் நடவடிக்கைக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றில் பொதுநல மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

மனுவை கடந்த வாரம் விசாரித்த நீதிபதிகள் நேற்றுத் தீர்ப்பளித்தனர். இதன்படி தேர்தலை நியாயமாக நடத்துவதற்கு தேர்தல் திணைக்களத்திற்கு எல்லா அதிகாரமும் உண்டு என்றும் , தேர்தல் திணைக்களத்தில் எடுக்கும் நடவடிக்கை அதிகாரத்தில் தலையிட முடியாது என்றும் அதேநேரத்தில் நடத்தப்படும் சோதனைகள் தொடர்பாக உரிய ஆவணங்கள் பராமரித்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் தேர்தல் திணைக்களத்துக்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளது.

உரிய ஆவணங்கள் இருக்கும் பட்சத்தில் பணம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்யக் கூடாது. இவ்வாறு தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் திணைக்களம் குறித்து ஆளும்கட்சியினர் அதிருப்தி தெரிவித்திருந்த நேரத்தில் இந்தத் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# எழுத்தறிவு வீதம் தமிழகத்தில் அதிகரிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் எழுத்தறிவு விகிதம் 73.45 சதவீதத்திலிருந்து 80.33 சதவீதம் அதிகரித்திருப்பதாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் மக்கள்தொகை 15.60 சதவீதம் அதிகரித்துள்ளது, மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை 7 கோடியே 21 லட்சத்து 88 ஆயிரத்து 958 ஆக உள்ளதாகவும், இவர்களில் ஆண்களின் எண்ணிக்கை 3 கோடியே 61 லட்சத்து 56 ஆயிரத்து 958 எனவும், பெண்களின் எண்ணிக்கை 3 கோடியே 59 லட்சத்து 80 ஆயிரத்து 087 ஆகவும் உள்ளது. 1000 ஆண்களுக்கு 995 பெண்கள் என்ற விகிதத்தில் உள்ளதாக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நேரமாற்றம்

தமிழகத்தில் இதுவரை காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நேரமாக இருந்தது. இந்நிலையில் தமிழகத்தில் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நேரம் மாற்றப்பட்டுள்ளது.

# யாருக்கு வாக்களிக்க வேண்டும் ம.தி.மு.க அடுத்த வாரம் முடிவு

(சென்னை)

அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்றிருந்த ம.தி. மு.க. திருப்திகரமான தொகுதிகள் கிடைக்காததால் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்தது. இதையடுத்து ம.தி.மு.க.வின் ஆதரவை தி.மு.க. கூட்டணியில் உளள கட்சிகள் கோரின. ஆனால், அதற்கு ம.தி.மு.க. சார்பில் இதுவரை எந்தப் பதிலும் வெளியிடப்படவில்லை. தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து ம.தி.மு.க. விலகியுள்ள போதிலும் ம.தி.மு.க. தொண்டர்கள் யாருககு வாக்களிக்க வேண்டும் என்பது பற்றி வைகோ எதுவும் தெரிவிக்கவில்லை.

ம.தி.மு.க. நிர்வாகிகள் யாருக்கு ஆதரவாக தேர்தல் பணி செய்யவேண்டும் என்றும் தெரிவிக்கப்படவில்லை. என்றாலும் பல்வேறு தொகுதிகளில் தி.மு.க.வுக்கு ஆதரவாக ம.தி.மு.க.வினர் செயற்படுவதாக தெரிய வந்துள்ளது. ம.தி.மு.க.வுக்கு வாக்குகள் அதிகம் உள்ள தென்மாவட்டங்களிலும், கொங்கு மண்டலத்திலும் தி.மு.க.வுக்காக ம.தி.மு.க. வினர் ஓசையின்றிப் பணியாற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் ம.தி.மு.க. தொண்டர்கள் எப்படி செயற்பட வேண்டும் என்பதற்கான அறிவிப்பை அடுத்த வாரம் வைகோ வெளியிடுவர்ர் என்று தெரிய வந்துள்ளது. உங்கள் விருப்பம் போல் வாக்களிக்கலாம் என்று ம.தி.மு.க. சார்பில் அறிவிக்கப்படும் என்று ஒரு சாரார் கூறுகிறார்கள். தி.மு.க. கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வைகோவை தொடர்ந்து அழைத்து வந்த போதிலும், தி.மு.க., அ.தி.மு.க. அணிகளிடமிருந்து ம.தி.மு.க. தள்ளி நின்று தன் தனித்தன்மையை உறுதிப்படுத்தும் என்று கூறப்படுகிறது.

# அ.தி.மு.கவின் கவிதை நடை நோட்டீஸ் ஆளும் கட்சி கூட்டணியினர் கலக்கம்

(உளுந்தூர்பேட்டை)

ஆளுங்கட்சியால் இருண்ட தமிழகத்தை, மீண்டும் ஒளி பெற செய்ய, ஜெயலலிதாவின் கரங்களை வலுப்படுத்துவோம் என்ற அ.தி.மு.க., பிரசார நோட்டீசால், தி.மு.க., வினர் கலக்கமடைந்துள்ளனர்.

தேர்தல் பிரசார நோட்டீசில், ஒரே ஒருகணம் சிந்திப்பீர். விண்ணை முட்டும் விலைவாசி- கண்ணை கட்டும் மின் வெட்டு, நித்தம் நித்தம் கொலை, கொள்ளை- அப்பாவித் தமிழனுக்குப் பாதுகாப்பு இல்லை. அரசு பணத்தில் இலவச "டிவி" - கேபிள் இணைப்பில் பகல் கொள்ளை.

வாரிசுகளைக் காக்கப் போராட்டம் - வாக்களித்த தமிழனுக்கு ஏமாற்றம், மக்கள் விரோத மைனாரிட்டி தி.மு.க, ஆட்சியில் விழி பிதுங்கும் விலைவாசி ஏமாற்றம், உள்ளிட்ட வாசகங்களை கவிதை நடையில் வெளியிட்டுள்ளனர்.

மேலும், அ.தி.மு.க., ஆட்சி காலத்தில் விலைவாசியையும், தி.மு.க., ஆட்சி காலத்தில் விலைவாசி உயர்வையும், 25 பொருட்களை வைத்து பட்டியலிட்டுள்ளனர். அ.தி.மு.க., வினரின் கவிதை நடை நோட்டீஸ் பிரசாரத்தால், ஆளுங் கட்சி கூட்டணியினர் கலக்கமடைந்துள்ளனர்.








தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

நான்காவது அகவையில்



பெயர்: மூ.புரட்சி
முகவரி: 2ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

நான்காவது அகவையில்



பெயர்: மூ.புரட்சிகா
முகவரி: 2ம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..................................
முகவரி : ..................................
பிறந்த ஆண்டு : ..................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

..................................
பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.


# விஜயகாந்தை விமர்சிப்பதற்கு வடிவேலுவுக்கு தகுதியில்லை

## நடிகர் சிங்கமுத்து

(சென்னை)

சினிமாவில் காமெடியில் இணைந்து கலக்கிய நடிகர் வடிவேலுவும் சிங்கமுத்துவும் நிலப் பிரச்சினையில் எதிரிகள் ஆனார்கள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் பொலிஸில் புகார் செய்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார்கள். அந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. இந்த நிலையில் நடிகர் வடிவேலு தி.மு.க.வுக்கு ஆதரவாகத் தேர்தல் பிரசாரத்தில் குதித்தார். தி.மு.க. மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்துப் பேசிவரும் வடிவேலு, விஜயகாந்தை ஒவ்வொரு கூட்டத்திலும் வெளுத்துக் கட்டுகிறார்.

வடிவேலுக்கு எதிராக களம் இறங்க சிங்கமுத்துவும் முடிவு செய்தார். நேற்றுமுன்தினம் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஜெயலலிதாவைச் சந்தித்து தனது விருப்பத்தை தெரிவித்தார். உடனே அவரை பிரசார களத்தில் இறக்க அ.தி.மு.க. முடிவு செய்தது. அதன்படி நேற்றுமுன்தினம் மாலை சென்னையில் பிரசாரத்தை தொடங்கினார்.



நடிகர் சிங்கமுத்து பேசியதாவது-

இதற்கு மேலும் துன்பப்பட முடியாது. எனவே தான் மாற்றத்தை ஏற்படுத்த தமிழக மக்கள் விரும்புகிறார்கள். விலைவாசி உயர்வு, மின் வெட்டால் மககள் அவதிப்படுகிறார்கள்.

புரட்சித் தலைவியால் தான் தமிழக மக்களை காப்பாற்ற முடியும். தி.மு.க.வினருக்கு மககள் மீது அக்கறை இல்லை. 2ஜியில் தப்பிப்பதுதான் அவர்கள் கவலை. புதிதாக ஒரு நடிகர் (வடிவேலு) வந்துள்ளார்.

அவரைப்பற்றிப் பேசுவதே அசிங்கம். விஜயகாந்த் சினிமாவில் சம்பாதித்து விட்டுத்தான் அரசியலுக்கு வந்துள்ளார். அவரைப்பற்றி இவர் விமர்சிக்கிறார்.

நிதானமில்லாமல் விஜயகாந்த் பேசுகிறாராம். நீ எப்பப்ப நிதானமாய் இருப்பாய் என்பது தெரியாதா? உன்னைப் பற்றி எனக்குத்தானே தெரியும். கட்டிய வேட்டியோடு சென்னைக்கு வந்தாய்.

ஒரு சோப்பை நாலாக வெட்டி வேட்டியை துவைத்துக் கட்டினாய். விஜயகாந்தைப் பற்றி விமர்சிக்க உனக்கு எந்தத் தகுதியும் இல்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைத் தமிழர் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தமிழக மக்களின் ஆதரவு அதிகம் தேவை

## தூதுவர் பிரசாத் காரியவசம் கோரிக்கை



(கொழும்பு)

இலங்கைத் தமிழர் வாழ்வாதாரத்தை உறுதி செய்ய தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு தேவை என இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இந்தியாவும், இலங்கையும் நீண்டகாலமாக நட்பு நாடுகளாக உள்ளன. கடந்த 25 ஆண்டுகளாக பல்வேறு பிரச்சினைகளில் சிக்கினாலும், இப்போது இலங்கையில் அமைதி திரும்பியுள்ளது.

ஆசியாவின் மிகப் பெரிய நாடு இந்தியா. இலங்கை சிறிய நாடு. இந்திய அரசும், தலைவர்களும் விடுத்த அழைப்பை ஏற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மும்பை வருகிறார். அவரது இந்த வருகையின் போது வேறு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்புகள் இருக்காது. இலங்கை பல மொழிபேசும் மக்களைக் கொண்டது. கலாசாரம், கலை, விளையாட்டு என இலங்கையின் ஒட்டுமொத்த தூதராக தமிழரான கிரிக்கெட் வீரர் முத்தையா முரளீதரன் விளங்குகிறார்.

இரு நாட்டு மீனவர்கள் பிரச்சினையில் அண்மையில்தான் கூட்டு நடவடிக்கைக் குழு கூடியது. இருநாட்டு மீனவர்களும் பரஸ்பரம் தங்கள் கடல் எல்லைகளைத் தாண்டிச் செல்லாமல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட வேண்டும் என அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இலங்கை மக்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். தொழில்நுட்பக் கல்வியில் இந்தியாவின் ஒத்துழைப்பு மட்டுமின்றி மற்ற நாடுகளின் ஒத்துழைப்பையும் கோரி வருகிறோம்.

இலங்கையில் உள்ள தமிழர் தமிழ் கற்க விரும்பினால், தடையின்றி அதைக் கற்கலாம். அதேபோல, மற்ற மொழி பேசுபவரும் அவர்கள் விரும்பிய மொழிப் பாடத்தைக் கற்க இலங்கை கல்வி நிலையங்களில் வசதி உள்ளது. இலங்கையில் மீள்குடியமர்வு தீவிரமாக நடைபெற்றுவருகிறது. சுமார் 5 ஆயிரம் குடும்பங்கள் பூர்வீகப் பகுதிகளுக்குத் திரும்பாமல் உள்ளனர். தங்கள் வாழ்வாதாரம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அவர்கள் கோருகிறார்கள்.

ஏற்கெனவே மீள்குடியமர்வு செய்யப்பட்ட வட,கிழக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி வருகிறது. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வரும் வடகிழக்கு மாகாண மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த தமிழ்நாட்டு மக்களின் ஆதரவும், மீனவர்களின் உதவியும் தேவைப்படுகிறது. இலங்கையின் மற்றப் பகுதிகளை விட கட்டமைப்பு வசதிகளில் யாழ்ப்பாணம் 30 ஆண்டுகள் பின் தங்கி உள்ளது. இப்பகுதி யின் நிலையை உயர்த்தவும் தமிழக மக்களின் ஆதரவு தேவை.

இலங்கையில் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மறுவாழ்வுப் பணிகளை இந்தியாவைச் சேர்ந்த யாரும் எப்போது வேண்டுமானாலும் காணலாம். அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இலங்கை அரசு தயாராக உள்ளது எனத் தெரிவித்தார்.

# கட்டாரில் பணத்தைத் திருடிய இலங்கைப்பெண்ணுக்கு சிறை

(கொழும்பு)

கட்டாரில் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண்ணுக்கு ஒரு வருட சிறைத்தண்டனை வழங்கி அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கட்டார் நாட்டு நாணயப் பெறுமதிப்படி 11 ஆயிரம் கட்டார் றியாலை இவர் பணிபுரிந்த வீட்டிலிருந்து திருடி வைத்திருந்தார் என இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இலங்கை நாணயப் பெறுமதியின் பிரகாரம் 3 இலட்சத்து 34 ஆயிரத்து 831 ரூபா ஆகும். குறித்த பெண் கடந்த வருடம் மே மாதம் கட்டாரிற்கு பணிப் பெண்ணாகச் சென்ற அடுத்த மாதத்திலேயே குறித்த வீட்டில் பணத்தைத் திருடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

39 வயதுடைய குறித்த பெண் இந்தப் பணத்தை குப்பைக்குள் மறைத்து வைத்திருந்தபோதே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 8 ஆயிரம் கட்டார் றியாலை அப்பெண் தங்கியிருந்த அறையிலிருந்தும் மற்றும் ஒரு தொகைப்பணம் நிலவிரிப்பிற்கு கீழிருந்தும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தண்டனைக்காலம் முடிவடைந்த பின்னரே இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவார் என டோஹா நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

# லங்கா ஈ.நியூஸ் செய்தி ஆசிரியர் கைது ஊடக அமைப்புகள் கடும் கண்டனம்

(கொழும்பு)

'லங்கா ஈ நியூஸ்' இணையத்தளத்தின் செய்தி ஆசிரியர் பெனட் ரூபசிங்க கைது செய்யப்பட்டிருப்பதை வன்மையாகக் கண்டித்துள்ள அனைத்துலக ஊடக அமைப்புகள் அவரை உடனடியாக விடுவிக்குமாறு இலங்கை அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

மாலபேயில் உள்ள லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தின் பணியகம் அண்மையில் எரிக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள போத்தய என்பவரின் சகோதரரை தொலைபேசி மூலம் மிரட்டினார் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே பெனட் ரூபசிங்க கைது செய்யப்பட்டார்.

கடுவெல நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட அவரை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



லங்கா ஈ நியூஸ் செய்தி ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளதற்கு, பிரான்சைத் தளமாகக் கொண்டு செயற்படும் எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் போன்ற பல்வேறு அமைப்புகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பைச் சேர்ந்த கில்ஸ் லோர்டட் இது பற்றிக் கருத்து வெளியிட்டபோது,

லங்கா ஈ நியூஸ் ஊடகத்துக்கு எதிரான தொடர்ச்சியான தொல்லைகளின் ஒரு பகுதியாகவே இதனைப் பார்க்கிறோம்.

இந்த இணையத்தளம் தனது பணிகளைச் சுதந்திரமாகச் செய்ய அனுமதிக்க வேண்டும். அதற்கு அந்த உரிமை இருக்கிறது.

ஊடக சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் ஆகிய விடயத்தில் அனைத்துலக நியமங்களுக்கு ஏற்ப செயற்படுமாறு இலங்கை அரசாங்கத்தைக் கோருகிறோம் என்று கூறியுள்ளார்.

# தனியார் துறையினருக்கு ஓய்வூதியம் தொழிற்சங்கங்கள் கலந்துரையாடல்

(கொழும்பு)

தனியார் துறையினருக்கான ஓய்வூதியத் திட்டம் வழங்குவது குறித்த தமது நிலைப்பாட்டை அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்கு முன்னர், தாம் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக தனியார் துறை தொழிற்சங்கத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 4 ஆம் திகதி தேசிய தொழிலாளர் ஆலோசனை சபை, தொழிற்சங்கங்கள், தொழில் தருநர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் முத்தரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசிக்காமல் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இத்தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பி. தலைமையிலான அனைத்து கம்பனித் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் வசந்த சமரசிங்க இதுதொடர்பாகக் கூறுகையில்,

"நாம் ஓய்வூதியத் திட்டத்திற்கு எதிரானவர்கள் அல்ல. நாம் ஓய்வூதியத் திட்டத்தை விரும்புகிறோம். ஆனால் தற்போதைய திட்டத்திற்கு தொழிலாளர்கள் சாதகமான பதிலளிப்பதை நாம் காணவில்லை. அதனாலேயே கலந்துரையாடலகளை நடத்தவுள்ளோம் என்றார்.

சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் அன்டன் மார்கஸ் கருத்துத் தெரிவிக்கையில், இத்திட்டத்தில் பல சந்தேகங்கள் உள்ளன. அவை தீர்க்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார்.

தனியார் துறையில் சுமார் 15,000 வெற்றிடங்கள் உள்ள போதிலும் ஊழியர்களை ஈர்க்கக்கூடிய நலத்திட்டங்கள் இல்லாததால் அவ்வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# தொலைத்தொடர்பு கோபுரபாதிப்பு குறித்து நாடளாவிய ரீதியில் ஆய்விற்கு ஏற்பாடு

(கொழும்பு)

தொலைத்தொடர்பு கோபுரங்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து நாடளாவிய ரீதியில் ஆய்வொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்திருப்பதாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு இன்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பொது மக்களிடமிருந்து கிடைத்த பெரும் எண்ணிக்கையான முறைப்பாடுகளையடுத்து இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவ்வாணைக்குழு கூறியுள்ளது.

மின்னல் காரணமாக தமது வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுவதாக குடியிருப்பாளர்களிடமிருந்து ஒரு மாதத்தில் 10 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் வலையமைப்புகள் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் தமர சிறி டி அல்விஸ் தெரிவித்தார்.

செல்லிடத் தொலைபேசி வலையமைப்புகள் அதிகரித்துள்ள நிலையில் தொலைத் தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன. இதனால் தமது ஆரோக்கியத்திற்கு பாதிப்பு ஏற்படலாம் எனவும் மின்னல் தாக்கம் ஏற்படும் எனவும் குடியிருப்பாளர்கள் சிலர் கருதுகின்றனர் என அவர் கூறினார்.

"உலக தரத்திற்கேற்ப இக் கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவற்றினால் ஏற்படும் மின்னல் தாக்கத்தின் அளவு குறித்து தீர்மானிப்பது கடினம். பொதுமக்களிடமிருந்து வரும் முறைப்பாடுகளை நாம் உதாசீனப்படுத்த முடியாது எனவும், அவர் தெரிவித்தார்.

"பொதுவாக, உயரமான பொருட்கள் எதுவும் இல்லாத நிலையில்தான் தரையிலுள்ள பொருட்களை அல்லது நபர்களை மின்னல் ஈர்க்கும். எனினும் வலிமையான மின்னல் தாக்கும்போது மின்சார வயர்களில் தாக்கம் ஏற்பட்டு வீடுகளுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

"எமக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை ஆதாரமற்றவையாகும். எனவே அவற்றின் பாதிப்பு குறித்து எமது ஆய்வுகள் முடிவடையும்வரை தெரியவரமாட்டா எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜனாதிபதிக்கு எதிரான சுவரொட்டி அச்சிடல் அடிப்படை உரிமை மீறல் மனு வாபஸ்

(கொழும்பு)

ஜனாதிபதிக்கு எதிராக சுவரொட்டி அச்சிட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்ட நபர், தான் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை வாபஸ் பெற்றுள்ளார்.

அச்சகமொன்றின் உரிமையாளரான ஜயம்பதி புளத்சிங்கள எனும் இந் நபர், தனக்கு எதிராக கங்கொடவில நீதிவான் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து தான் விடுதலை செய்யப்பட்டதையடுத்து தனது அடிப்படை உரிமை மீறல் மனுவை வாபஸ் பெறுவதாக உயர் நீதிமன்றில் தெரிவித்தார்.

18ஆவது திருத்தச்சட்டத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிராக சுவரொட்டிகளை அச்சிட்ட குற்றச்சாட்டில் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

ஆனால் தான் குற்றச் செயல் எதிலும் ஈடுபடவில்லை எனவும் த்தான் கட்சிகளுக்கிடையிலான அரசியல் மோதலால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தனது அடிப்படை உரிமை மீறல்மனுவில் அவர் தெரிவித்திருந்தார்.

எனினும் இவ்விவகாரம் தொடர்பாக தனக்கு எதிராக கங்கொடவில நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கிலிருந்து தான் விடுதலை செய்யப்பட்டுள்ளதால் தனது அடிப்படை உரிமை மீறல் மனுவை வாபஸ் பெறுவதாக அவர் கூறினார்.

அதையடுத்து நீதிபதிகள் ஷிரானி திலகவர்தன, கே.ஸ்ரீபவன் ஆகியோரைக் கொண்ட நீதிபதிகள் குழாம் இம்மனுவை தள்ளுபடி செய்தது.

# இந்தியா எம்மீது சுமத்தியுள்ள மாகாண சபை முறை தோல்வி

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க



(கொழும்பு)

இந்தியா எம்மீது சுமத்திய மாகாண சபை முறைமை தோல்வி கண்டுவிட்டது. நாங்கள் எதிர்பார்த்தவிடயம் மாகாணசபைகளில் கிடைக்கவில்லையென ஜாதிகஹெல உறுமயவின் பிரதிநிதியும்,மின் சக்தி, எரிசக்திதுறை அமைச்சருமான சம்பிக்கரணவக்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர்மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அபிவிருத்தி மற்றும் ஏனைய விடயங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்தி வருகின்றது. ஆனால் அந்தப் பேச்சுக்கள் மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்துக்கு அமைவாகவே இடம்பெறவேண்டும். .காரணம் நாட்டின் அதிகளவான மக்கள் ஜனாதிபதியின் மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்துக்கே ஆணை வழங்கியுள்ளனர். அதனை அனைவரும் மதிக்கவேண்டியது அவசியமாகும்.

அரசியல் தீர்வு அல்லது எவ்வாறான செயற்பாடாக இருந்தாலும் அது மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தை மீறிச் செல்லக்கூடாது. சகல பிரிவினரினதும் சம்மதத்துடனேயே அனைத்து விடயங்களும் இடம்பெறவேண்டும். மேலும் இந்தியா எம்மீது சுமத்திய மாகாண சபை முறைமையானது தோல்விகண்டுள்ளது என்றே நாங்கள் கூறுகின்றோம். எதிர்பார்த்த விடயம் மாகாண சபை முறைமையில் கிடைக்கவிலலை.

எனவே உள்ளூராட்சி மன்றங்களை அடிப்படையாகக் கொண்டு கிராம சேவை பிரிவுகளை இணைத்து மேற்கொள்ளப்படவுள்ள மக்கள் சபைகள் என்ற வேலைத்திட்டமே சிறந்த தீர்வுத்திட்டமாக எதிர்காலத்தில் அமையும் என்பது எமது நம்பிக்கையாகும்.

எனவே நாங்கள் மக்கள் சபைகள் என்ற விடயத்துக்கே செல்லவேண்டும். அந்த வேலைத் திட்டத்தை ஊக்குவித்து விரைவில் நாடளாவிய ரீதியில் மக்கள் சபைகளை அமைத்து கிராமங்களின் அபிவிருத்திக்காக செயற்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

# மூன்று லட்சம் கண்ணிவெடிகள் வடக்கு, கிழக்கில் அகற்றல்

(கொழும்பு)

வடக்கு,கிழக்குப் பகுதிகளில் இதுவரை 3 இலட்சத்து 11 ஆயிரத்து 31 கண்ணிவெடிகள்,மற்றும் மிதிவெடிகள் இராணுவ கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவல்ல தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு,கிழக்குப் பகுதியில் இராணுவ கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் கண்ணிவெடியகற்றும் பணிகள் தொடர்ந்தும் நடைபெற்ற வண்ணமுள்ளன. இதுவரை மூவாயிரத்து 716 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு பிரதேசம் கண்ணிவெடி அபாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.



அத்துடன் பொதுமக்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் இந்தச் செயற்பாட்டின்போது வெடிக்காத பல வெடி பொருட்களும், அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டில் சனத்தொகை மதிப்பீடு அலுவலர்களுக்கு பயிற்சி வழங்கல்

(கொழும்பு)

இலங்கை அரச பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் தொகை மதிப்புப் பத்திரம், குடும்பத் தலைவர் பட்டியல் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன.

கடந்த 31 வருடகால இடைவெளியின் பின்னர் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக நாட்டில் காணப்பட்ட அசாதாரண சூழ்நிலையால் இந்தப் பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கிராம அலுவலர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 4ஆம் 5ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் கொழும்பு பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிலிருந்து வருகை தரவுள்ள தகவல் தொழில்நுட்பப் பிரிவு அலுவலர்களினால் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 04ஆம் திகதி நெடுந்தீவு,ஊர்காவற்துறை, காரைநகர் உதவி அரசாங்க அதிபர் அலுவலங்கள் வேலணை, யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கும் எதிர்வரும் 05ஆம் திகதி மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் தெல்லிப்பளை, சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அலுவலர்களுக்கும் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

# ஒரே வலையமைப்பின் கீழ் அனைத்துப் படைப்பிரிவுகளும்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்துப் படைப்பிரிவினரையும் ஒரே வலையமைப்பின்கீழ் கொண்டுவர பாதுகாப்பமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. நாட்டிலுள்ள பாதுகாப்புத் துறையினரின் தகவல்களை சிறந்த முறையில் பேணுவதற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவப்பேச்சாளர் மேஜர்ஜெனரல் உபய மெதவெல தெரிவித்துள்ளார். மேலும் இராணுவப் படையினருடன் ஒன்றிணைந்த தொடர்பாடலைப் பேணவும்,நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டுவரவுமே பாதுகாப்பு வலையமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார். இதற்கமைய இந்நடவடிக்கைக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கை தற்போது பாதுகாப்பமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# நாளை நடைபெறவுள்ள ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(கொழும்பு)

உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தலைமையில் உடுவில் பிரதேசசபையின் சுன்னாகம் பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் பிரதேச அபிவிருத்தி சம்பந்தமாக நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். பிரதேசத்தின் மக்கள் அபிவிருத்திச் செயற்பாடுகள், பிரச்சினைகள் சம்பந்தமாக இங்கு கலந்துரையாடப்படவுள்ளது.

# இரவு ஒன்பது மணிக்குப் பின்னரும் யாழ்.குடாநாட்டில் சோதனை தொடரும்



(கொழும்பு)

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினரின் வீதிச் சோதனை நடவடிக்கைகள் இனிமேல் இரவு 9 மணிக்குப் பின்னரும் நீடிக்கும் என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சர்வ மதத்தலைவர்கள் குழுவினருடனான சந்திப்பின் போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை காலமும் இரவு 6மணிக்கு ஆரம்பமாகும் இராணுவத்தினரின் வீதிச் சோதனைகள் இரவு 8.30 மணிக்கு நிறைவு பெற்றுவிடும்.அதன் பின்னர் செல்லும் வாகனங்களோ மோட்டார் சைக்கிள்களோ மறிக்கப்பட்டு சோதனையிடப்படுவதில்லை.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட களவுகளும் கொலைகளும் பெரும்பாலும் பின்னிரவுகளிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. அதேவேளை நெடுந்தூர வாகனங்களும் இரவு 9மணிக்குப் பின்னரே யாழ்.குடாநாட்டுக்குள் நுழைகின்றன.

இது தொடர்பாக பல தரப்பட்டவர்களாலும் இராணுவத்தினரிடம் எடுத்துக்கூறப்பட்ட போதும் இராணுவம் மட்டுப்படுத்தப்பட்ட நேரம் மட்டுமே வீதிச் சோதனை மேற்கொண்டு வந்தன. இதனையடுத்தே சோதனை நடவடிக்கைகள் நீடிக்கப்பட்டுள்ளன.

# வீரர்களை கௌரவிக்கும்வகையில் தபால் முத்திரைகள் வெளியீடு

(கொழும்பு)

உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொண்ட இலங்கை அணி வீரர்களை கௌரவப்படுத்தும் வகையில் நான்கு முத்திரைகளை வெளியிடவுள்ளதாக தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க தெரிவித்தார்.

உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் இலங்கை அணி, எவ்வாறான நிலைமை அடைந்தாலும்,இந்த முத்திரை வெளியீடு மூலம்,இலங்கையணியின் வீரர்களை உலகிற்கு பறைசாற்றுவதே இதன் நோக்கமாகும்.

கடந்தமாதம் பத்தாம் திகதி இந்த முத்திரைகளை வெளியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்ட போதிலும்,ஐ.சி.சியின் அனுமதி கிடைக்காததால் அந்த நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# நுளம்புப் பெருக்கம் கட்டுப்படுத்த தவறியமை 4 ஆயிரம் பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் கடந்த 23ஆம் திகதியிலிருந்து 29ஆம் திகதி வரையான தேசிய நுளம்பு ஒழித்தல் வாரத்தில் நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை நடவடிக்கையின்போது, 61 ஆயிரத்து 780 இடங்கள், நுளம்புப் பெருக்கம் உள்ள பகுதிகளாகக் கண்டறியப்பட்டதுடன் நுளம்புப் பெருக்கத்தை கட்டுப்படுத்த தவறியமைக்காக 4ஆயிரத்து 405 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுத் தெரிவித்தது,

நாடளாவிய ரீதியில் இரண்டு இலட்சத்து 63 ஆயிரத்து 217 இடங்கள் பொதுப் பரிசோதகர்களால் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் ஏழாயிரம் இடங்கள் நுளம்பு பெருகுவதற்கான இடங்களாக அவதானிக்கப்பட்டு, உரிமையாளர்களை அவ்விடங்களை உடனடியாகச் சுத்தம் செய்யுமாறு பணிக்கப்பட்டது.




இந்த நுளம்பு ஒழிப்பு வார நடவடிக்கையில் முப்படையினர்,பொலிஸ் மற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபட்டனரென சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

இதேவேளை நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் பொது மக்கள் முப்பது நிமிடநேரத்தை ஒதுக்கி தமது வாழ்விடப்பகுதியைத் துப்புரவு செய்யவேண்டுமென சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

# பணம்பொருள் உற்பத்தி அதிகரிப்பு மூலம் தேசிய வருமானத்தை அதிகரிக்கத் திட்டம்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலுக்கு ஜனாதிபதி பாராட்டு



(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிநடத்தலின் கீழ் இந்நாட்டில் கித்துள் மற்றும் பனை மரங்களின் மூலம் தேசிய வருமானத்தை பெருக்குவதற்கான பாரிய அபிவிருத்தி திட்டமொன்றை அரசாங்கம் இப்பொழுது துரிதகதியில் மேற்கொண்டு வருகின்றது.

கித்துள் மற்றும் பனை மரங்களில் கள் இறக்குவதற்கு அனுமதிப் பத்திரம் தேவைப்பட்டது. இப்போது அந்த நடைமுறையை அரசாங்கம் நீக்கியுள்ளது. இனிமேல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய அவசியமில்லை. கித்துள் மற்றும் பனை மரங்களிலிருந்து கள் இறக்கி அதன் மூலம் பாணியைத் தயாரித்து பாமர மக்களின் வருமானத்தை அதிகரிப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அலரிமாளிகையில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், இலங்கையில் 29 இலட்சத்து ஏழாயிரம் கித்துள் மரங்கள் இருக்கின்ற போதிலும், அவற்றில் 15 சதவீதமான அதாவது 90 ஆயிரம் கித்துள் மரங்களில் இருந்தே கள் மற்றும் கித்துள் பாணி வர்த்தக ரீதியில் பெறப்படுவதாகவும் தெரிவித்தார்.

தற்போது இலங்கை சீனியை இறக்குமதி செய்வதற்கு 40 மில்லியன் ரூபாவரை செலவு செய்கின்றது. கித்துள் பாணியைக் கூடுதலாக உற்பத்தி செய்தால் சீனி இறக்குமதிக்கான செலவை 50 சதவீதம் குறைத்துவிடலாம் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

ஒரு கித்துள் மரத்தில் இருந்து ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு 10 000 ரூபா முதல் 20 ஆயிரம் ரூபா வரை வருமானம் பெறமுடியும். கித்துள் மரமொன்றில் இருந்து நாளொன்றுக்கு 8 லீற்றர் பதனீரை பெற்று அதியுயர் தர கித்துள் பாணியையும் கித்துள் கருப்பட்டியையும் தயாரித்து சந்தைப்படுத்தி நாட்டின் தேசிய வருமானத்தை பெருக்க முடியும் என்று சுட்டிக்காட்டியுள்ள ஜனாதிபதி, இவற்றை ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

கித்துள் மரங்கள் மற்றும் பனை மரங்கள் மக்களுக்கு நல்ல வருமானத்தைப் பெற்றுக் கொடுக்க கூடியதாக இருக்கின்ற போதிலும், இன்றைய இளைஞர்கள் மரம் ஏறும் தொழிலை ஒரு தாழ்ந்த தொழிலாக கருதி அதில் ஈடுபடுவதற்கு தயக்கம் காட்டி காரியாலயத்தில் அமர்ந்து செய்யும் தொழில்கள் மீதே ஆர்வம் காட்டி வருகிறார்கள் எனத் தெரிவித்த அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, தொழிலின் மகத்துவத்தை உணர்த்தக் கூடிய வகையில் எமது இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற உணர்வை அவர்கள் மத்தியில் வலுவடையச் செய்வதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழிநடத்தலின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கித்துள் மரம் தென்னை பனை மரங்களை போன்று மக்களின் வாழ்க்கையில் பல வகையில் உதவக் கூடிய பயனுள்ள மரமாகும். கித்துள் மர இலையை வீடுகளை வேய்வதற்கும் அதன் பலகையை கூரைகளை நிர்மாணிக்கவும் மக்கள் பயன்படுத்தலாம். கித்துள் மரத்தில் இருந்து கித்துள் பாணி போன்றவற்றை பெறுவதுடன் சிறந்த போஷாக்கு உணவான கித்துள்மாவும் பெறமுடியும் என்றார்.

### வடக்கில்..

நிலவும் முதலீட்டு வாய்ப்புக்கள் மீது கூடுதலானவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். ஐக்கிய அமெரிக்கா 1.74 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கையில் முதலீடுசெய்துள்ளது.

### அதிகரிக்கிறது...

அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர், 2006 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க கொடுப்பனவுமுறை மோசடி தொடர்பான சட்டத்தின் கீழ் கிரடிட் கார்ட் மோசடி மற்றும் அது தொடர்பான மோசடிகளை விசாரிக்கும் அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் போது பொலிஸாருக்கு உதவுவதற்காக பொறியியல்துறை மற்றும் மென்பொருள் பொறியியல் தொடர்பில் தகைமையுள்ள நபர்களடங்கிய குழுவொன்றை நியமிக்கமுடிவு செய்யப் பட்டது. அதன்படி விசேட வர்த்தமானி மூலம் நிபுணர்கள் குழு நியமிக்கப்பட்டுள்ளதோடு இதற்கு பாராளுமன்ற அனுமதி பெறுவதற்காக பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.

இந்த நிபுணர்கள் குழுவில் ஹேமசிறி கருணாநாயக்க, துவான் இர்சாத் ஹலால்தீன், பிமல் குணபால, நளின் சரத்குமார, கே. ஜி. பி. சிறிகுமார ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். இலங்கை கணினி அவசர பொறுப்புணர்வு அமைப்பும் இதில் அங்கம் வகிக்கிறது. கடன் அட்டை மோசடிகள் நடைபெறுவதோடு இவற்றை தடுக்கும் வகையில் புதிய நிபுணர்கள் குழு செயற்படும். என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வவுனியா-பம்பைமடுவில் காசநோய் வைத்தியசாலை

(வவுனியா)

வவுனியா-பம்பைமடுவில் புதிதாக அமைக்கப்படவுள்ள காசநோய் வைத்தியசாலைக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

வெளிநாட்டு, தொண்டு நிறுவனத்தின் நிதியுதவியுடனும், சுகாதார அமைச்சின் அனுமதியுடனும் ஒன்றரைக் கோடி ரூபா செலவில் வைத்தியசாலையும் விடுதியும் நிர் மாணிக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வர்த்தக மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிசாட் பதியூதீன் உட்பட சுகாதாரத் திணைக்கள உயர் அதிகாரிகள், லயன்ஸ் கழக முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (39)

### ஆயுதப்புதையல்கள்..

போது புதைக்கப்பட்டிருந்த நிலையில் புலிகளின் பெருந்தொகையான ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அதிசக்தி வாய்ந்த தொலைத்தொடர்புக்கருவிகள்-03, டிஜிட்டல் அலைவரிசையிலான தகவல் தொலைத்தொடர்புக்கருவிகள், கைக்குண்டுகள் 16, பீரங்கிக் குண்டுகள் 16, அதிசக்தி வாய்ந்த கிளேமோர் குண்டுகள் 05, என்பவற்றுடன் பெருந்தொகையான துப்பாக்கி ரவைகள் மற்றும் ஆயுதங்களுக்கான உதிரிப்பாகங்கள் என்பனவும் அடம்பனில் நடைபெற்ற சோதனை நடவடிக்கையின் போது கைப்பற்றப்பட்டுள்ளன. என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### உலகக்கிண்ணத்தை..

போட்டி இன்று மும்பையில் உள்ள வான்கடே மைதானத்தில் நடக்கிறது. இதைக் காண ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியா சென்றுள்ளார். போட்டிக்கு முன் திருப்பதி கோயிலுக்குச் சென்ற அவர், அங்கு ஒரு மணிநேரம் சாமி தரிசனம் செய்துவிட்டு, சிறப்பு பூஜையில் கலந்து கொண்டார்.

இரவு திருப்பதி மலையில் உள்ள ஸ்ரீகிருஷ்ணா பிரமாண்ட விருந்தினர் மாளிகையில் தங்கிவிட்டு இன்று காலை மும்பைக்கு புறப்படுகிறார்.

இது குறித்து பொலிஸ் அதிகாரி ரவீந்தர் கூறியதாவது, இலங்கை அதிபருக்கு பலத்த பாதுகாப்பு அளிக்குமாறு மத்திய உளவுத்துறை அறிவுறுத்தியுள்ளது. அதன்படி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர் வருகையில் பாதுகாப்பு வளையம் அமைத்து அவரைப் பத்திரமாக அழைத்துச் செல்வோம் என்றார்.

### அபிவிருத்தியும்...

மக்களின் ஆதரவு பெற்ற அரசியல் சக்தியாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மாறிவருகிறது. இந்த நிலையில் எதிர்காலத்தில் நடைபெறக் கூடிய அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெறக் கூடிய சாத்தியங்கள் உண்டு என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின், செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உள்ளூராட்சி சபைகளுக்கான எமது வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் நாம் சட்டத்தின் உதவி நாடி நீதிமன்றம் சென்றுள்ள நிலையில் எமக்கு நியாயம் கிடைக்கும் என நம்புகின்றோம். அத்தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் நாமே கைப்பற்றக் கூடிய சாத்தியங்கள் அதிகம் உண்டு. அதேபோன்று நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலிலும் மக்களின் கணிசமான ஆதரவு எமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

எமது மக்களுடன் மக்களாக வாழ்ந்து அவர்களது பிரச்சினைகளையும் தேவைகளையும் அறிந்து எம்மால் இயன்றளவில் அவர்களுக்கான பணிகளை நாம் தொடர்ந்து ஆற்றி வருகிறோம்.

கடந்த 30 வருட காலமாக எமது மண்ணில் நடந்து முடிந்துள்ள அழிவு யுத்தம் அனைத்தையுமே துவம்சம் செய்துள்ள நிலையில், அவை அனைத்தையும் மீளக் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு அழிவிலிருந்து எழுந்து உயர்ந்திட அபிவிருத்தி அரசியல் தீர்வு பெற்று நிமிர்ந்திட அதிகாரப் பகிர்வு எனும் இலக்கை முன்வைத்து முகம் கொடுக்கின்றோம். எமது மக்கள் தருகின்ற அரசியல் பலத்தை அம்மக்களின் நலன்களை மாத்திரம் கருதி மிகவும் சரியான முறையில் பயன்படுத்தி வருபவர்கள் ஈ.பி.டி.பி.யினர். இந்த வகையில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலின் போது எமது மக்கள் வழங்கும் அரசியல் பலத்தை கொண்டு மேலும் பல அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியுமெனவும் அதிகாரப் பகிர்வை நோக்கிய எமது இலக்கிற்கு அது மென்மேலும் வலுசேர்க்கும் என்றும் நாம் நம்புகின்றோம். மக்களின் அன்றாடத் தேவைகள், அபிவிருத்தி, சமூகக் கட்டமைப்பு, புனர்வாழ்வு, தொழில் வாய்ப்பு போன்ற அனைத்து விடயங்களிலும் முழுமையான அவதானங்களைச் செலுத்தி எம்மால் பல்வேறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் அரசியல் உரிமை தொடர்பில் நடைமுறைச் சாத்தியமான தீர்வினை முன்வைத்து, அதற்காக நாம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருவதுடன்,அதில் படிப்படியான வெற்றியையும் கண்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாங்கள் வாக்குக் கேட்பது மக்களின் ஆக்கத்திற்காக என்பதனை எமது மக்கள் நன்கு உணர்ந்து வருகின்றனர். எனவே அதிகளவிலான வாக்குகளையும் சபைகளையும் வழங்குவதன் மூலம் எமது இலக்காகிய அபிவிருத்தியையும் அதிகாரப் பகிர்வினையும் எம்மால் சரிவர எட்ட முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

புலம்பெயர் நாடுகளில் வாழுகின்ற மக்கள் எமது நாட்டிற்கு வந்து செல்கின்ற போது இங்குள்ள உண்மை நிலையை நேரிலே கண்டு அறிந்து கொள்கின்றனர். இந்நிலையில் எமது பாரிய பணிகளுக்கு புலம்பெயர்ந்து வாழும் தோழர்களாகிய நீங்களும் புலம்பெயர்ந்து வாழுகின்ற எமது மக்களும் அதிகளவு ஆதரவு தர முன்வர வேண்டும். அழிவு யுத்தம் ஏற்படுத்திச் சென்றுள்ள பாரிய அழிவுகளிலிருந்து மீட்டு எமது மக்களின் அனைத்துத் துறைகளையும் மீளக் கட்டியெழுப்பி அம்மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவதற்காக நாம் இரவு பகல் பாராது உழைத்து வருகின்றோம் என்றும் தெரிவித்தார்.

### ஏறாவூரில்..

நண்பகல் ஜும்மா தொழுகையின் பின்பு மீரா ஜும்மா பள்ளிவாசல் முன்பாக கூடிய முஸ்லிம்கள் பிரதேச செயலகம் வரை பேரணியொன்றை நடத்தினர்கள்.

மேற்குலக நாடுகள் லிபியாவில் தொடுத்துள்ள வான் தாக்குதல்களை கண்டிக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள், அந்தத் தாக்குதல்களை நிறுத்தக் கோரி மகஜரொன்றை ஐ.நா. செயலாளர் நாயகத்திற்கு அனுப்பி வைப்பதற்காக பிரதேச செயலாளரிடம் கையளித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட முஸ்லிம்கள் குறிப்பாக அமெரிக்காவிற்கு எதிரான சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பினர்கள்.


ஆர்ப்பாத்திற்கு தலைமை தாங்கிய ஏறாவூர் ஜாமி அத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஏ.சி.அப்துல் மஜீத் கூறியதாவது.

அரபு நாடுகளில் காணப்படுகின்ற வளங்களை அமெரிக்காவும் அதன் நேச நாட்டுப் படைகளும் சூறையாடி தங்களை வளப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படுகின்ற யுத்தமே தவிர இது மக்களை மீட்பதற்கான யுத்தம் அல்ல என்றார்.



# தமிழகத்தில் ஜெயலலிதாவுக்கு வெற்றிவாய்ப்பு; இலங்கைத் தமிழர் பிரச்சினை கைகொடுக்கும்

## முன்னணிப் பத்திரிகைகளின் கருத்துக் கணிப்பு



(கொழும்பு)

இலங்கை தமிழர் விடயத்தின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அனைத்து இந்திய அண்ணா திராவிடக் கழகத்தின் கூட்டணி அமோக வெற்றி பெறும் என புதிய கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

இந்தியா ருடே, ஹெட்லைன்ஸ் ருடே, மெயில் ருடே ஆகிய பத்திரிகைகள் நடத்திய கருத்துக் கணிப்பில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவுட் லுக் வார இதழ் நடத்திய கருத்துக் கணிப்பிலும் இதே பெறுபேறு கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் - காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியும் கேரளத்தில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியும் ஆட்சியை கைப்பற்றும்.

அசாமில் எந்தக் கட்சிக்கும் அணிக்கும் பெரும்பான்மை கிடைக்காமல் இழுபறி நிலைமை ஏற்படும் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.


இதற்கிடையில், இலங்கைத் தமிழர்கள் தொடர்பில் போதிய செயற்பாட்டை முன்னெடுக்காமை, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் சந்தித்த அசாதாரண நிலைகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காமை போன்ற காரணங்களுக்காக தமிழக மக்கள் கருணாநிதியை இந்தமுறை எதிர்ப்பர் என சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், சட்ட ஒழுங்கு சீர்குலைவு, அமைச்சர்கள் - அதிகாரிகளின் ஊழல் போன்ற காரணங்களுக்காகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது தமிழக மக்களுக்கு நம்பிக்கை இல்லாது போயுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழர்களின் பிரச்சினையை முறையாகக் கையாள தமிழக அரசாங்கம் தவறிவிட்டது என இந்தக் கருத்துக் கணிப்பில் கலந்து கொண்ட 41 சதவீதமான மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இலங்கை தமிழர்களுக்காக போதிய அளவில் கருணாநிதி செயற்பட்டுள்ளார் என 25 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளனர்.

எவ்வாறாயினும், இலங்கை தமிழர் விவகாரம் தமிழக அரசியலில் செல்வாக்கு செலுத்தாது என அண்மையில் த ரைம்ஸ் ஒப் இந்தியா சுட்டிக்காட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# முன்னாள் புலி உறுப்பினர்கள் சமூகத்துடன் இணைக்கப்பட்டனர்



(வவுனியா)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்ற புலி உறுப்பினர்கள் 206 பேர் நேற்றையதினம் அவர்களது உறவினர்கள் மற்றும் பாதுகாவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நகரசபை கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் 205 ஆண் உறுப்பினர்களும், ஒரு பெண் உறுப்பினரும் சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வைபவத்தில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் வி.டபிள்யூ. கொடிப்பீரி, புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(39)

# லிபியா மீதான கூட்டுப்படைத் தாக்குதல்கள்; ரஷ்யா வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தாதது ஏன்?

## கேள்வி எழுப்புகிறது இத்தாலி

(கொழும்பு)

லிபியா மீதான தாக்குதலுக்கு எதிராக ரஷ்யா அல்லது சீனா அதன் வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று இத்தாலி கருத்து வெளியிட்டுள்ளது.

லிபியாவில் வான்பறப்புத் தடை வலயத்தை அமுல்படுத்துவது தொடர்பாக ஐக்கிய நாடு கள் பாதுகாப்புச் சபைக்கு முன்மொழியப்பட்ட பிரேரணைக்கு எதிராக வீட்டோ அதிகாரம் பயன்படுத்தப்பட்டிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும் என்று இத்தாலியப் பாதுகாப்பு அமைச்சர் இக்னாசியோ லா ருஸ்ஸா (Ignazio La Russa) வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் அமெரிக்க தாக்குதலுக்கு ஆதரவு தெரிவித்த இத்தாலிய ஜனாதிபதி ஜோர் ஜியோ நாபொலிதானோவை கேலியாகவும் விமர்சித்துள்ளார்.

அத்துடன் ஐரோப்பிய யூனியனும் தாக்குதலுக்கு ஆதரவாக இருந்தாலும் அதனை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். லிபியத் தாக்குதல் காரணமாக இத்தாலிக்கு தப்பி வரும் அகதிகளின் எண்ணிக்கை மிக வும் அதிகரித்துள்ளதே இத்தாலியப் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றுக்கான காரணம் என்று அன்ஸா செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தாலியத் தீவான லம்பெதூஸா தீவில் குவிந்துள்ள அகதிகளைக் கட்டுப்படுத்த முடியாத காரணத்தால் தீவின் உள்ளூராட்சிமன்ற பிரதிநிதிகள் தற்போது ராஜினாமாச் செய்துள்ளனர்.

## உயர்வடைகிறது பெற்றோல் விலை

பெற்றோல் மற்றும் டீசலின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

பெற்றோல் ஒரு லீற்றர் பத்து ரூபாவாலும் டீசல் ஒரு லீற்றர் மூன்று ரூபாவாலும் அதிகரிக்கப் பட்டுள்ளது. இதன் பிரசாரம் ஒரு லீற்றர் பெற்றோல் 125 ரூபாவாகவும், டீசல் ஒரு லீற்றர் 75 ரூபா எனவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.


## டோகா கட்டாரில் உடனடி வேலைவாய்ப்பு

| இல | வெற்றிடம் | எண்ணிக்கை | முன்னனுபவம் | ஊதியம் டோகா கட்டார் | ஊதியம் இலங்கை ரூபா |
|---|---|---|---|---|---|
| 1) | இலகு ரக வாகன ஓட்டுனர் | 05 | Gcc Experien and Licennce | 1200 | 37,200/= +OT |
| 2) | Auto Mobile Mechanic & Auto Mobile Electrican | 02 | Experiencer in Froeign Vehicles | 1200 | 37,200/= +OT |
| 3) | கட்டட மின்னினைப்பாளர் | 05 | ——— | 1000 | 31,000/= +OT |
| 4) | உதவியாளர் | 20 | ——— | 900 | 27,900/= +OT |

மேற்குறிப்பிட்ட பணிகளை பூர்த்தி செய்வதற்குப் பணியாளர்கள் உடனடியாக வேண்டப்படுகின்றார்கள்.
நேர்முகப்பரீட்சை 25.03.2011 லிருந்து அனைவரினதும் வேண்டுகோளிற்கு இணங்க நீடிக்கப்பட்டுள்ளது.
நேரம்:- காலை 10.00 am - 4.30 p.m வரை நடைபெறும்.
தங்குமிடம், வைத்திய, போக்குவரத்து வசதிகள் மற்றும் உணவுக்கொடுப்பனவு நிறுவனத்தினால் வழங்கப்படும். மேலதிகநேரம் வேலை செய்பவர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படும்.
வேலை நேரம் 8 மணித்தியாலங்கள். வாரத்தில் 6 நாட்கள். ஏனையவை டோகா கட்டார் ஊழியர் சட்டத்திற்கு அமைவாக நடைபெறும்.

Avon International (PVT) Ltd
# 138, Kanakaratnam Road
Ariyalai, Jaffna 40000 - Srilanka

முன்பதிவுகளுக்கு: T.P- 0215676676, 0215679679 Hotline - 0759115111
E.mail - avon lk @ rocket mail .com (C/640)


# புலிகளுக்கு ஆயுதங்கள் கிடைப்பது...

ஸ்தம்பித்துப்போன சமாதானச் செயற்பாடுகள் விடயத்தில் எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பது என்பதில் அமெரிக்கா இருக்கின்ற பக்கத்திலேயே இந்தியாவும் இருப்பதாக அமெரிக்கா நம்பியது.

இலங்கைத் தமிழர்களின் அபிலாஷைகளை அரசாங்கம் புறக்கணிக்கின்றது என்ற புலிகளின் பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அரசியல் தீர்வினை முன்வைக்கச் செய்து புலிகளின் ஆயுத மற்றும் பண பலத்தை முறியடிப்பது என அப்போதைய அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி.ஜே.லண்ஸ்டட் 2006 மே 3 இல் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்துக்கு அனுப்பிவைத்துள்ள கேபிளில் தெரிவித்துள்ளார் என விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தி அனுப்பப்பட்டு எட்டுத் தினங்களின் பின்னர்தான் புலிகள், முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா மீது தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். அதே வருடம் ஜூன் மாதத்துக்குப் பின் அனுப்பப்பட்டுள்ள தகவல்களின் படி இந்தக் குழுக்கள் பற்றி இந்தியா மகிழ்ச்சியாகக் காணப்பட்டது. இந்த சர்வதேசத் திட்டத்தில் இந்தியாவின் பங்களிப்பையும் பெற்றுக்கொள்ள இந்தியா மீது அழுத்தங்களைப் பிரயோகிக்குமாறும் இலங்கை கோரியுள்ளது.

இந்தத் தொடர்பாடல் குழுக்களின் விவரம் மற்றும் அதன் சேர்க்கை பற்றி முதற்தடவையாக 2006 ஆகஸ்ட் 21 இல் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இருந்து அனுப்பப்பட்டுள்ள கேபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியா, பெல்ஜியம், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், சுவிட்ஸர்லாந்து, தாய்லாந்து, பிரிட்டன். அமெரிக்கா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இந்தக் குழுக்கள் அமைந்துள்ளன.

மே மாதம் மூன்றாம் திகதி அனுப்பப்பட்டுள்ள கேபிளின்படி கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அரசியல் அதிகாரிக்கும், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் முதலாவது செயலாளர் அமந்தீப் சில்கிங்கிற்கும் இந்த விடயத்தில் நெருக்கமான உறவுகள் இருந்துள்ளன.

அரசியல் தீர்வுகளை முன்வைக்குமாறு இந்தியா இலங்கையை தொடர்ந்து கேட்டுவந்துள்ளது என்பது தெளிவாகின்றது. ஆனால் இந்த விடயத்தில் போதிய முன்னேற்றம் காணப்படவில்லை. ஜூன் மாதம் 12 ஆம் திகதி புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் பதில் அரசியல்துறை அதிகாரி தொடர்பாடல் குழுவின் செயற்திட்டத்தை கையளிப்பதற்காக இந்தியா, பங்களாதேஷ், மியன்மார், இலங்கை ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளார்.

இதில் கலந்து கொண்ட இந்தியப் பிரதிநிதி, தான் இதுபற்றி இந்திய வெளியுறவுச் செயலாளர் சரண் உடன் பேசியுள்ளதாகவும், இந்தக் குழுக்களின் நியமனம் அர்த்தமுள்ளது என அவர் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அதே தினத்தில் கேபிள் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. இதில் அமெரிக்கத் தூதுவர் டேவிட் மல்பர்ட் ஒப்பமிட்டுள்ளார். இந்தியப் பிரதிநி[illegible] குமார் நிதி சேகரிப்பைத் தடுக்கும் குழுவில் கனடா சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

அதற்கு முன்னர் அமெரிக்கப் பிரதிநிதியுடன் நடந்த சந்திப்பில் தென்கிழக்கு ஆசிய நாடுகளான தாய்லாந்து, மலேஷியா என்பனவற்றை ஆயுதங்கள் கிடைப்பதைத் தடுக்கும் குழுவில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

ஜூன் 20 இல் லன்ஸ்டட் கொழும்பிலுள்ள தனது சகா நிருபமா ராவைச் சந்தித்தார். அமெரிக்க இந்திய கூட்டுத் திட்டங்கள் மற்றும் தொடர்பு கொள்ளல் குழுக்களை உருவாக்கல் என்பன பற்றியதாக இந்தச் சந்திப்பு இருந்தது.

கூட்டுத் திட்டங்கள் குறித்து நிருபமா உற்சாகத்துடன் காணப்படவில்லை என்று லன்ஸ்டட் ஜூன் 21இல் அறிவித்துள்ளார். ஜூன் 22இல் இந்திய வெளிவிவகார அமைச்சின் அமெரிக்க விவகார இணை செயலாளர் ஜெய்சங்கர் புதுடில்லியில் உள்ள அமெரிக்கத் தூதரக அரசியல் பிரிவு அதிகாரியைச் சந்தித்துள்ளார்.

கூட்டுக் கையாளலை விட இந்தியா சமாந்தரமான போக்கில் செல்லவுள்ளதாகவும் இது தாக்கம் மிக்கதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள இரகசிய கேபிள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எது எவ்வாறு இருந்தபோதிலும் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே அமெரிக்காவுடன் இலங்கையும் இணைந்து புலிகளுக்கு எதிராக சர்வதேச ரீதியாக தொழிற்படத் தொடங்கியுள்ளது தெரியவந்துள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஏப்ரல் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.